பக்கங்கள் : பதின்னான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 23 வெள்ளிக்கிழமை (07.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 221

# அனுசரணைப் பணியில் தீவிரம் காட்ட நோர்வேக்கு இந்தியா கோரிக்கை!

## புதுடில்லியிலிருந்து ஒஸ்லோவுக்குத் தகவல்

கொழும்பு, ஜூலை 07

**இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் தற்போது மந்தமடைந்திருக்கும் நோர்வேயின் அனுசரணைப் பணியைத் தீவிரப்படுத்தும்படி இந்தியா கோரியிருக்கின்றது எனத் தெரிகின்றது.**

**இது தொடர்பாக சில தினங்களுக்கு முன்னர் புதுடில்லியிலிருந்து ஒஸ்லோவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவருகின்றது.**

இந்திய வெளியுறவுத்துறையின் செயலாளர் ஷியாம் சரண் இவ்வார முற்பகுதியில் ஒன்றரை நாள் விஜயமாகக் கொழும்புக்கு வந்து அரசுத் தலைமையோடு பேச்சு நடத்தி விட்டுத் திரும்பிய பின்னரே புதுடில்லி இவ்வாறு ஒஸ்லோவைக் கோரியிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு மாற்று எதுவுமில்லை என்பதை இந்திய வெளிவிவகாரச் செயலாளர் தமது கொழும்பு விஜயத்தின்போது இங்கு திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்தப் பின்னணியிலேயே வெளியுறவுச் செயலாளரின் கொழும்பு விஜயத்தின் பெறுபேறு குறித்து, இலங்கை அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வேத் தலைவர்களுக்கு இந்தியத் தரப்பினால் தகவல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதம் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 7

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை 85 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

பிரேரணைக்கு ஆதரவாக 102 வாக்குகளும், எதிராக 17 வாக்குகளும் பெறப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்க முஸ்லிம் காங்கிரஸும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் ஐ.தே.க. எம்.பி. தி.மகேஸ்வரனும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார். (க)

## சிவராம் கொலைச் சந்தேக நபர்கள் இருவருக்கும் எதிராக குற்றப்பத்திரம்

கொழும்பு,ஜூலை7

பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவராம் (தராகி) கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்களுக்கும் எதிராக குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் முடிவு செய்திருக்கின்றார் என அறிய வருகின்றது.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி கொழும்பில் சிவராம் படுகொலை செய்யப்பட்டார்.

சிவராம் பயன்படுத்திய கைத் தொலைபேசியின் 'சிம்' அட்டையுடன் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவரான ஆறுமுகம் ஸ்ரீஸ்காந்தராஜா (பீற்றர்) என்பவரும் ரவி என்ற மற்றொரு நபரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பீற்றர் என்பவர் கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார். மற்றவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொலையுடன் சம்பந்தப்பட்ட - மூன்றாவது முக்கிய - சந்தேக நபர் தலைமறைவாகி விட்டார். அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை கடற்படை முகாம் அருகே படை அதிகாரி சுடப்பட்டு மரணம்!

### பிஸ்டல் குழுவினரின் கைவரிசை எனத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 07

வேலணைப் பகுதியில் கடற்படையின் அதிகாரி தரத்திலான ஒருவர் நேற்று நண்பகல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

றாகமவைச் சேர்ந்த சிறிர பண்டார ரட்ணாயக்க(வயது 38) என்ற அதிகாரியே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவர்.

விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரே இவரைச் சுட்டுக் கொன்றார் என்று இராணுவப் பேச்சாளர் தகவல் வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் தீவகப் பிரதேசத்தில் பெரிய கடற்படை முகாம் அமைந்திருக்கும் துறையூர் தளம் அருகே இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

கடற்படை முகாமில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் சங்க சமாச அலுவலகத்துக்குச் சென்றிருந்த சமயம் இந்தக் கடற்படை அதிகாரி சுடப்பட்டார். உடனடியாக ஹெலிக்கொப்டர் மூலம் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து வேலணைப் பகுதியில் பதற்றம் நிலவியது. வேலணை - வங்களாவடிச் சந்திக்கு அப்பால் பொதுமக்கள் செல்ல சுமார் 3 மணி நேரம் அனுமதிக்கப்படவில்லை. யாழ். நகரப் பகுதியில் இருந்து தீவுப் பகுதிகளுக்குச் சென்றவர்களும் அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடிக்கு அப்பால் செல்ல விடாது தடுக்கப்பட்டனர்.

வேலணை துறையூர் பிரதேசத்தில் படையினர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரவளை நகரில் நேற்றுக் காலை திடீர்த் தேடுதல்; 90 தமிழர்கள் கைது!

### வீடுகள், வாகனங்களை படையினர் சல்லடை போட்டனர்

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஊடுருவியிருக்கிறார்கள் எனக் கிடைத்த தகவலொன்றினை அடுத்து நேற்று அதிகாலை பண்டாரவளை நகரப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்திய பொலீஸாரும், படையினரும் தமிழர்கள் 90 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். இவர்களில் 15 பெண்களும் அடங்குவர்.

நேற்று அதிகாலை 5 மணியிலிருந்து முற்பகல் பதினொரு மணி வரை இந்தத் தேடு தல் நடத்தப்பட்டது. இந்தத் தேடுதலின் போது 150 வீடுகளும், 288 வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. 117 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்று பண்டாரவளைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினரும், பொலீஸாருமென சுமார் 30 பேர் தேடுதலில் ஈடுபட்டனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் போதிய ஆவணங்களைக் கொண்டிருக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு புலிகள் இயக்கத்துடன் தொடர்புகள் இருக்கின்றனவா என்பது குறித்து விசாரணை நடத்தி, அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## புலிகள் தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசியே தீர்வு!

### அடித்துக் கூறுகிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு,ஜூலை7

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து புலிகள் கூறும் வியாக்கியாணங்களைப் பொருட்படுத்தும் அவசியம் அரசுக்கு இல்லை. புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளும் அல்லர்.''

- இவ்வாறு நேற்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார் தகவல் ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான அனுர பிரியதர்ஷன யாப்பா. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, அதிகாரப் பரவலாக்கல் குறித்தான அரசின் நிலைப்பாடு குறித்து விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கும் கூற்று தொடர்பில் செய்தியாளர்கள் அமைச்சரிடம் வினவினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கவன ஈர்ப்புப் போராட்டம் பிரான்ஸில் தொடர்கிறது!

தமிழீழத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ வன்முறைகள், அடக்கு முறைகளை எதிர்த்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இடம்பெற்று வரும் சுழற்சி முறையிலான கவன ஈர்ப்பு உண்ணா விரதப் போராட்டம் 18 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இக்கவன ஈர்ப்புப் போராட்டம் பிரான்ஸ் மற்றும் வெளிநாட்டு மக்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்களின் இன்றைய நிலைமைகளை விளக்கி ஐரோப்பிய ஒன்றியத் தலைமைக்கு அனுப்பப்படும் அஞ்சல் அட்டைகளில் மக்களின் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கைகளை தமிழ் இளையோர் அமைப்பினர் விநியோகிக்கின்றனர். (க)

## ஆளும் தரப்புக்குத் தாவினார் ஐ.தே.க. எம்.பி. புஞ்சி நிலமே

### உடனடியாகவே அவருக்குப் பிரதி அமைச்சர் பதவி

கொழும்பு,ஜூலை7

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சி நிலமே நேற்று ஆளுங்கட்சியில் இணைந்துகொண்டார். அவருக்கு உடனடியாகவே பிரதி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான புஞ்சி நிலமே கிராமிய பொருளாதார பிரதி அமைச்சராக நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

இவரது கட்சித்தாவல் தொடர்பாக ஐக்கிய

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கைதுசெய்யப்படுவது தொடர்ந்தால் பாடசாலை சமூகம் திரண்டு தாக்குதல் நடத்தும்

## நெல்லியடி மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

கரவெட்டி,ஜூலை7

மாணவர்கள் கைதுசெய்யப்படுவது தொடர்ந்தால் பாடசாலை சமூகத்தினரைத் திரட்டி படையினர் மீது தாக்குதல் நடத்த வேண்டிய நிலை ஏற்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர் ஒன்றியம்.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மேற்படி ஒன்றியம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

பேச்சு என்று போலி நாடகமாடிய சிங்கள அரசு எம்மையும் எமது இனத்தையும் முழுமையாக அழிப்பதற்கு ஒட்டுக்குழு என்னும் துரோகிகளான ஈ.பி.டி.பி.யின் உதவியுடன் கங்கணம் கட்டி நிற்கிறது. சிங்கள அரசு ஜெனீவா பேச்சுக்குப் பின்னர் அல்லைப்பிட்டியில் 13 அப்பாவிப் பொதுமக்களையும் புத்தூரில் 5 இளைஞர்களையும் நெல்லியடியில் 7 அப்பாவித் தமிழ் இளைஞர்களையும் வங்காலையில் இரு சிறுவர்கள் உட்பட ஒரு குடும்பத்தையும் கொடூரமாகக் குத்திக் கொலை செய்துள்ளது. இவை குறித்து மௌனம் சாதித்த ஜனாதிபதி கெப்பிட்டிக்கொல்லாவ கிளைமோரின் போது மட்டும் உணர்ச்சிமிக்கவராகத் தன்னைக் காட்டிக்கொண்டார்.

இந்நிலையில் -

எமது மக்கள், எமது மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள கொலைகள், கற்பழிப்புகள், கைது செய்தல் என்பன உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லை என்றால் ஒரு சில தினங்களில் பாடசாலை மாணவர்கள் அனைத்து பாடசாலை மாணவர்களையும் ஒன்றிணைத்து எமது சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் ஒன்றிணைவர். அதன் பின்னர் சிங்கள வெறியர்கள் மீது தாக்குதல் நடத்துவோம்.

புனிதமான நாளான கரும்புலிகள் தினத்தன்று சிங்கள வெறியர்களுக்கு இதனைத் தெரியப்படுத்துவதுடன் எமது மக்கள் - எமது மாணவர்கள் முழுமையாக போராட்டத்தில் இணைந்து சுதந்திரமான தமிழீழம் உருவாக வழிவகுப்போம். - என்று அதில் உள்ளது. (70)

# [அ]ண்மையில் காணாமற்போனோரின் உறவினர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை7

குடாநாட்டில் அண்மையில் காணாமற்போனோர் தொடர்பாக மேல்நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒன்பது பேரின் உறவினர்களை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு வருமாறு ஆணைக்குழுவின் இணைப்பாளர் கோரியுள்ளார்.

அழைக்கப்பட்டுள்ள ஒன்பது பேரின் விவரம் வருமாறு-

வ.தயாளினி - நாவற்குழி, கணபதி கதிர்வேலு - சரவணா வீதி, யாழ்ப்பாணம், இராசையா - கொடிகாமம், இராகுலன் - 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், ஜயசேகர் - காங்கேசன்துறை, என்.சத்தியசீலன் - பண்டத்தரிப்பு, செல்வி ஆ.சிவாஜினி - உரும்பிராய் கிழக்கு, தி.அசோகன் -சங்கானை, எஸ். ஆனந்தன் - மட்டுவில் வடக்கு. (ம)

# பருத்தித்துறைக்குச் சென்ற இளைஞர் வல்லையில் படையினரால் தடுப்பு

## சோதனை நிலையத்தில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி மினிபஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர் நேற்று மாலை வல்லை சோதனை நிலையத்தில் படையிரால் தடுத்துவைக்கப்பட்டார் என தெரிய வந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று பிற்பகல் 4.40 மணியளவில் புறப்பட்ட மினிபஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த பிரஸ்தாப இளைஞனும் மற்றும் பயணிகளும் வல்லை சோதனை நிலையத்தில் இறக்கிச் சோதனை செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப இளைஞனைத் தடுத்வைத்த படையினர் ஏனையோரைச் செல்ல அனுமதித்தனர் என்று கூறப்பட்டது.

தடுத்துவைக்கப்பட்ட இளைஞன் தொடர்பாக மேலதிக தகவல் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. (ம-15)

# சிறந்த பத்திரிகையாளர்கள் கௌரவிக்கப்படும் நிகழ்வு

கொழும்பு,ஜூலை7

பல்வேறு துறைகளிலும் திறைமைகளை வெளிப்படுத்திய பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கும் விழா எதிர்வரும் 11ஆம் திகதி கல்கிசை மவுண்ட்லெவினியா ஹோட்டலில் நடைபெறும்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஆகியன இணைந்து நடத்தும் இவ்விழாவிலே புகழ்பெற்ற ஐந்து பத்திரிகையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஹேமா குணவர்த்தன, மொடாகெதர வணிகரத்ன, லெஸ்லி தஹநாயக, வே.வி.அபேகுணவர்த்தன, கலாசூரி ஆ.சிவநேசச்செல்வன் ஆகியோரே நீண்டகாலம் பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய பணிக்காகக் கௌரவிக்கப்படவுள்ளார்.

புகழ்பெற்ற பத்திரிகையாளரான திருமதி ஹேமா குணவர்த்தன 1953ஆம் ஆண்டு தொடக்கம் 1984ஆம் ஆண்டு வரையில் செய்தி மற்றும் சிறப்புக்கட்டுரை எழுத்தாளராக 'தினமின' பத்திரிகையில் சேவையாற்றியுள்ளார். பின்னர் 'விஜய' பத்திரிகையிலும் பணிபுரிந்துள்ளார்.

கேலிச்சித்திர மற்றும் ஓவியராக புகழ்பெற்ற மோடாகெதர வணிகரத்ன 1952ஆம் ஆண்டில் இருந்து லங்காதீப பத்திரிகையிலும் 1963இல் 'அத்த' மற்றும் 'தவச' பத்திரிகைகளிலும் சேவையாற்றியுள்ள அவர், இலங்கையில் உள்ள பல அச்சு ஊடகங்களிலும் சுதந்திர கேலிச் சித்திரவரைஞராகவும் சேவையாற்றியுள்ளார்.

1954ஆம் ஆண்டு 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் இணைந்துகொண்ட லெஸ்லி தஹநாயக்க பின்னர் ஞாயிறு மற்றும் தினசரி 'ஒப்சேவர்' பத்திரிகைகளில் ஆசிரியராகச் சேவைபுரிந்துள்ளார். அதன் பின்னர் தற்போது 'சண்டேலீடர்' பத்திரிகையில் பணியாற்றுகின்றார்.

1950 - 56 காலப்பகுதியில் 'பெரமுன' பத்திரிகையின் பிரதம ஆசிரியராக கடமைபுரிந்த வே.வி.அபேகுணவர்த்தன 'சிலுமின', 'ஜனதா', 'ஸவச' மற்றும் 'சியரட' ஆகிய பத்திரிகைகளிலும் சேவையாற்றியுள்ளார். பின்னர் 1976-78 காலப் பகுதிகளில் சிங்கள அகராதியின் உதவி ஆசிரியராகவும் இருந்தார். அதனையடுத்து 1978 - 95 காலப் பகுதிகளில் மகாவம்ச ஆசிரிய குழுவிலும் செயலாளர் பதவி வகித்தார்.

'வீரகேசரி' மற்றும் 'தினக்குரல்' பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியராக இருந்த கலாசூரி ஆ.சிவநேசச்செல்வன் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவரும் தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் உப தலைவராகவும் பதவி வகிக்கின்றார். அவர் இலங்கை இதழியல் கல்லூரியில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

இலங்கை இதழியல் கல்லூரியில் மும்மொழிகளிலும் திறமைகளை வெளிப்படுத்திய புதிய ஊடகவியலாளர்களுக்கும் இவ்விழாவில் விருது வழங்குவதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர். (ப)

# பொலீஸ் உத்தியோகத்தரை கொன்று விட்டு தன்னைத் தானே சுட்டுக்கொண்டார் சிப்பாய்!

## ஹொரவப்பொத்தானை பொலீஸ் நிலையத்தில் சம்பவம்

பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த- இராணுவத்திலிருந்து தப்பி வந்த - சிப்பாய் ஒருவர் பொலிஸார் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்.

ஹொரவரப்பொத்தானை பொலீஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர் ஒருவரை, குற்றச் சம்பவம் ஒன்றுக்காக பொலீஸார் கைது செய்திருந்தனர். இந்த நபர் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று அதிகாலை பொலீஸ் உத்தியோகத்தர், ஒருவரின் துப்பாக்கியைப் பறித்த அந்த நபர் அவரைச் சுட்டார். இதில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் அந்த இடத்திலே உயிரிழந்தார்.

பின்னர் சந்தேக நபர் தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். இதில் படுகாயமடைந்த அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (க)

# சங்கானையில் துப்பாக்கி மீட்பு

சங்கானை,ஜூலை7

சங்கானை நிற்சாமம் வயற் பகுதியில் இருந்து நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் ரி-56ரக துப்பாக்கி ஒன்றும் இராணுவச் சீருடை ஒன்றும் மீட்கப்பட்டன என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான படையினர் அந்தப் பகுதியை சுற்றிவளைத்து இவற்றை மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-29)

# பட்டப்பின் படிப்புகள் பீட விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீட 2006/2007 கல்வியாண்டிற்கான முதுமாணிக் கற்கை நெறியின் விரிவுரைகள் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் ஆரம்பமாகவுள்ளன.

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரதேசத் திட்டமிடலுக்கான முதுமாணிக் கற்கை நெறி, அபிவிருத்திக் கற்கைநெறிக்கான முதுமாணிக் கற்கைநெறி(தமிழ் மூலம், ஆங்கில மூலம்) நூலக தகவல் விஞ்ஞானத்திற்கான பட்டப்பின் டிப்ளோமா, பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி II ஆகிய கற்கை நெறிகளுக்கான விரிவுரைகளும் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை முதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

இக்கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற்றவர்கள் மேற்குறித்த நாளில் சமூகமளிக்குமாறு பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி கேட்டுள்ளார். (ரி)

# தும்பளை பாலியல் வல்லுறவு வழக்கு: எதிரியை விடுவித்தது மேல்நீதிமன்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை7

பருத்தித்துறை, தும்பளையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இளம்பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர் யாழ்.மேல்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பருத்தித்துறை தும்பளை என்னுமிடத்தில் இளம்பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு அவ்வூர் பு.ஜெகநாதன் என்பவருக்கு எதிராக யாழ்.மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி சொ. தியாகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் இவ்வழக்குத் தொடர்பான எல்லா சாட்சியங்களையும் ஒப்பு நோக்கிய நீதிபதி அவற்றில் காணப்பட்ட முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டியதுடன் எதிரி முறைப்பாட்டாளரின் விருப்பத்திற்கும் சம்மதத்திற்கு மாறாக பலாத்காரமாக பாலியல் வல்லுறவு கொண்டார் என்பதனை நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிரூபிக்க அரச வழக்குத் தொடுநர் தரப்பினர் நிரூபிக்கத் தவறியுள்ளனர் எனத் தெரிவித்து எதிரியை விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் அரச தரப்பில் அரச சட்டவாதி டி.எஸ்.சூசைதாசனும் எதிரி தரப்பில் சட்டத்தரணி எஸ்.சிவனேசனும் ஆஜரானார்கள்.

# கன்னன்குடா வாகன விபத்தில் 24 பேர் காயம் கோயில் திருவிழாவுக்குச் சென்று திரும்பியவர்கள்

ஏறாவூர், ஜூலை 07

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கன்னன்குடா பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் 24 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் 12 வயதுச் சிறுமியொருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனவும், இவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஏனைய 23 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலுப்பையடிச்சேனை நாகதம்பிரான் ஆலயத் திருவிழா வைபவங்களில் கலந்துகொண்டுவிட்டு நேற்றுக் காலை ஏழு மணியளவில் 'டிப்பர்' ரக வாகனமொன்றில் பயணித்துக் கொண்டிருந்த மக்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

அதிக வேகம் காரணமாக கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி தடம் புரண்டு அருகில் இருந்த பனைமரமொன்றில் மோதுண்டதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது. (க)

# பரிசளிப்பு விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் செ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க.தேவராஜா முதன்மை விருந்தினராகவும் உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (204)

# பண்பாட்டியல் முதுகலைமாணி மீள்பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்.பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பண்பாட்டியல் முதுகலைமாணி(எம்.ஏ) பட்டப்பின் பரீட்சை(மீள்பரீட்சை) முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சையில் சித்திபெற்றவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு –

செல்வி எஸ்.பாலசிங்கம், திருமதி பி.பாலசிங்கம்,செல்வி ப.செல்லையா, திருமதி ஜி.கணேசநாதன், ரி.ஜோன்குயின்ரஸ், கே. கமலநாதன், கே.ஆர்.கமலநாதன், கே.கதிரமலை.

இ.நித்தியானந்தன், ஏ.பிரபானந்தன், எம். ஸ்ரீமுருகவேள், என்.சுசீந்திரராஜா, ரி. தவேந்திரராஜா. (ரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837


## ஒற்றையாட்சி முறைக்கு வெளியில் வர தென்னிலங்கைத் தலைமை தயாரா?

உத்தேச அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய பல்லினக் குழு ஒன்றைத் தாம் நியமித்திருக்கிறார் என்றும் -

தீர்வுக்கான வெளித்தோற்ற வடிவத்தை - மேலோட்டமான வரைவு ஒன்றை - இந்தக் குழு வரைந்து தரும் என்றும் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிவிப்புக்கு விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து பிரதிபலிப்பு வெளியாகியிருக்கின்றது.

இவ்விவகாரம் குறித்துக் கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ் விடயத்தில் ஜனாதிபதி மஹிந்தர் இரட்டை வேடம் போடுகின்றார் என்றும் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதி மஹிந்தரின் அறிவிப்புத் தொடர்பாக இரண்டு விடயங்களைத் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

* முறியும் தறுவாயில் உள்ள போர் நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை - நடைமுறைச் சாத்தியமான - அம்சங்களை நிறைவேற்றி, சமாதான முயற்சிகளைத் தூக்கி நிறுத்துவதில் ஜனாதிபதி மஹிந்தர் கவனம் செலுத்தவில்லை.

* அதற்கு மாறாகத் தமிழர் தரப்பினால் என்றைக்கோ நிராகரித்து ஒதுக்கப்பட்ட - ஒற்றையாட்சியின் கீழான - அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய பல்லினக் குழு ஒன்றை அவர் நியமித்திருக்கின்றார்.

நேற்று இதே பத்தியில் நாம் சுட்டிக்காட்டிய அம்சங்களை தெளிவான வார்த்தைகளில் நேற்றுமுன்தினமே வெளிப்படுத்தியிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

ஜனாதிபதி நியமித்திருக்கும் பல்லின நிபுணர் குழு இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வுக்கு அப்பால் செல்லும் தீர்வு ஒன்றை முன்வைக்குமா என்பதில் தெளிவில்லை.

ஆனால், ஜனாதிபதி மஹிந்தரின் தேர்தல் காலக் கொள்கைகள், அவரின் 'மஹிந்த சிந்தனை', அவரது கூட்டணிக் கட்சிகளின் கூற்றுக்கள், அவரது அணிப் பிரமுகர்களினதும் மற்றும் அவரினதும் அண்மைக்கால உரைகள், போக்குகள், பல்லின நிபுணர்குழுவுக்கு அவர் நியமித்திருக்கும் ஆட்கள், அமைதி முயற்சிகளுக்கான முன்னேற்பாடுகள் என்ற பெயரில் கொழும்பில் நடத்தப்பட்ட ஆரவாரக் கூட்டங்கள் மற்றும் மாநாடுகளில் பகிரப்பட்ட கருத்துக்கள் போன்ற பல அம்சங்களை கவனத்தில் எடுத்துப் பார்க்கும் போது, தற்போதைய ஒற்றையாட்சி அடக்குமுறைத் திட்டத்துக்கு வெளியே வரும் எண்ணம் தென்னிலங்கைக்குக் கிஞ்சித்தும் இல்லை என்பது தெளிவாகின்றது.

இன்னொரு அம்சத்தையும் தமிழ்ச்செல்வன் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் புலப்படுத்தியிருக்கின்றார். இலங்கையின் ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசுவதற்காக கொழும்பு அதிகார மையங்களினால் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் விடுக்கப்பட்ட அழைப்புக்களைத் தமிழர் தரப்பினர் நிராகரித்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், ஒருபோதுமே இதுபோன்ற பேச்சுக்குத் தமிழர்களின் பிரதிநிதிகள் வரவே மாட்டார்கள் என்பதையும் தெளிவாகவே வெளிப்படுத்திவிட்டார்.

எனவே, ஒற்றையாட்சி முறைக்குள் அதிகாரத்தைப் பகிர்வது என்ற அடிப்படையிலான தீர்வு யோசனை ஒன்றையே தனது மேலோட்ட வரைவாக முன்வைப்பதற்கு, ஜனாதிபதி மஹிந்தரின் பல்லின நிபுணர் குழு மனம் கொண்டிருக்குமானால் இந்த நிபுணர் குழுவின் கூட்டங்களினாலும், சந்திப்புகளினாலும் எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை என்பதை இப்போதே அடித்துக் கூறி விடமுடியும்.

முன்னைய தென்னிலங்கை அரசுத் தலைவர்கள், காலத்தை இழுத்தடிக்கவும் சர்வதேச சமூகத்தையும், இலங்கை மக்களையும் ஏமாற்றவும் அவ்வப்போது நடத்திய சர்வகட்சி மாநாடுகள், வட்ட மேசை மாநாடுகள், அனைத்து அரசியல் கட்சிக் கூட்டங்கள், நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள் என்ற ஆரவார எடுப்புக்களின் வரிசையில் பல்லின நிபுணர் குழுக் கூட்டமும் ஒன்றாகி விடும். அவ்வளவே.

நாம் இப்பத்தியில் நேற்றுச் சுட்டிக்காட்டியபடி -

தமிழ்ச்செல்வன் தற்போது தெளிவுபடுத்திருப்பது போல -

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உண்மையான அக்கறை ஜனாதிபதி மஹிந்தவுக்கு இருக்குமானால், தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான துணைப்படை நடவடிக்கைகளையும், படுகொலைகளையும் நிறுத்த வேண்டும்; இராணுவ நெருக்குவாரத்தைத் தளர்த்த வேண்டும்; பொருளாதாரத் தடைகளை அகற்ற வேண்டும்; நோர்வே அனுசரணையாளர்களின் உதவியுடன் அமைதிப் பேச்சுக்கான புறச் சூழலை உருவாக்க வேண்டும். இதுதான் அவசர - அவசிய - தேவை.

இதனைக் கொழும்பு அதிகாரமையம் புரிந்துகொண்டிருக்கின்றதா என்பது கேள்விக்குரியதே.

ஜனாதிபதி மஹிந்தர் பதவியேற்று சுமார் ஒரு வாரகாலத்துக்குள் மாவீரர் தினத்தை ஒட்டிக் கருத்து வெளியிட்ட தலைவர் பிரபாகரன், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு யதார்த்தவாதி எனக் கருதப்படும் மஹிந்த ராஜபக்ஷ என்ன திட்டத்தைத் தருவார் என்பதை அறிவதற்காக சிறிது கால அவகாசம் தரலாம் என்று அறிவித்திருந்தார்.

திட்டவட்டமான காலஅவகாசம் அந்த அறிவிப்பில் இல்லாவிடிலும் இவ்வாண்டுக்குள் இது விடயத்தில் தீர்மானம் எட்டப்பட்டு விடும் என்பதைக் கோடி காட்டவும் தலைவர் பிரபாகரன் தவறவில்லை.

எனவே, தென்னிலங்கை அரசியல் தலைமைக்கு அவர் வழங்கக்கூடிய - வழங்கியிருக்கக் கூடிய - ஆகக் கூடுதலான கால அவகாசம் இவ்வாண்டு இறுதியுடன் முடிவடைந்து விடும். அதற்கு இன்னும் முழுமையாக ஐந்து மாதங்கள் கூட இல்லை.

அதற்கு முன்னர் தமது திட்டத்தை ஜனாதிபதி மஹிந்தர் வெளிப்படுத்தியாக வேண்டும். அப்படி வெளிப்படுத்தினால்தான் பேச்சு மூலம் - அமைதி வழி - தீர்வுக்கு வாய்ப்புண்டா என்பது தீர்மானிக்கப்படும்.

இக்கால அவகாசத்துக்குள் தனது திட்டத்தை மஹிந்தர் துணிந்து முன்வைப்பாரா?

தனது ஆட்சியைக் காப்பாற்றும் யதார்த்தத்துக்காக தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதிகளுக்கு அடிபணியும் தனது போக்கைத் தொடர்வாரா? அல்லது இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினையின் ஆழமான பரிமாணங்களையும், அவற்றில் உள்ள சிக்கல்களையும், விபரீதங்களையும், அவற்றின் பின்விளைவுகளையும் புரிந்துகொண்டு, அதற்கு நியாயமான தீர்வை முன்வைப்பதன் மூலம் இலங்கைத் தீவை போரழிவிலிருந்தும் பேரழிவிலிருந்தும் காப்பாற்றும் யதார்த்தவாதியாகச் செயற்படுவாரா?

இனிவரும் காலம் அதை முடிவு செய்யும்.

# அரசின் தீர்வை புலிகள் நிராகரித்தால் தமிழ்மக்களுடன் நேரடியாக பேசுவோம்

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் மங்கள

இனப்பிரச்சினையில் தீர்வு தொடர்பில் விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப் புலிகள் ஒரு பங்கேற்பாளர்கள் தான். ஆனால், அரசு முன்வைக்கின்ற தீர்வை விடுதலைப் புலிகள் நிராகரித்தால் நாம் நேரடியாக தமிழ் மக்களிடம் செல்வோம். அவர்களோடு கலந்துபேசித் தீர்வைக்காண்போம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர. கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை விடயத்தில் இந்தியா சிறிது எச்சரிக்கையுடன் செயற்படுவதற்கு நியாயமான காரணம் இருக்கிறது.

எமது நாட்டுக்காக தங்களது இராணுவத்தினரை அவர்கள் இழந்துள்ளனர். அவர்கள் இங்கிருந்து முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டனர். இலங்கை விடயத்தில் இந்தியா விலகியிருப்பதற்கு நியாயமான காரணங்கள் அவர்களுக்கு உண்டு. ஆனால் இலங்கைக்கு உதவுவதற்கு அந்த இடைவெளி தடையாக இல்லை.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும இராணுவ விடயங்களில் எமக்குச்சாதகமான நிலையில் இந்தியா உள்ளது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதில் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம். போரின் மூலம் தீர்வு காண்பது சரியான வழி அல்ல என்பதை இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளோம். தென்னிலங்கையில் ஒருமித்த கருத்தை உருவாக்கும் எமது முயற்சியை இந்தியா பாராட்டியுள்ளது.

ஜெயவர்த்தன, பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க ஆகிய அனைவருமே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முயற்சித்தனர். ஆனால் என்ன நடந்தது? தென்னிலங்கையின் ஒருமித்த கருத்து உருவாக்கப்படாததால் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

நாம் இப்போதும் பேச்சுகளு[illegible] மாறு கேட்டுக்கொண்டுள்ளோம். [illegible]டுதலைப் புலிகளுக்கு சர்வதேச ச[illegible]கம் அழுத்தம் கொடுக்க வேண்டும். விடுதலைப்புலிகள் மறுக்கின்ற போதும் தமிழ்மக்களின் நியாயபூர்வமான முறைமைகளுக்கு தீர்வு ஏற்படுத்த உள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்காகப் போராடவில்லை என்பதை சர்வதேச சமூகம் இப்போது உணர்ந்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் சொந்த செயற்றிட்டத்துக்காக போராடுகின்றனர். ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினரை வெளியேறச் சொல்லும் விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அரச சார்பற்ற நிறுவனத்தையும் வெளியேறச் சொல்ல வேண்டும் - என்றார் மங்கள சமரவீர.

(க)

## கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் பெரும் தேடுதல் வேட்டைக்கு ஏற்பாடு

கொழும்பு,ஜூலை7

மேல் மாகாணத்தில் பாரிய தேடுதல் வேட்டை நடவடிக்கை ஒன்றை நடத்த பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத் லூகொட தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள், கொலை அச்சுறுத்தல்கள், ஆள் கடத்தல்கள், குண்டுப் புரளிகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு மேல்மாகாணத்தில் திடீர் தேடுதல் நடவடிக்கை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் -

இதேவேளை -

அண்மைக்காலமாக கொழும்புப் பகுதியில் இடம்பெற்ற திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது 300இற்கு மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இத்தகைய தேடுதல் நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பு மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேல் மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களத்துக்குத் தகவல் கிடைத்துள்ளன என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

(ஐ)

## சிறுவர் இல்லப் பொறுப்பாளர் கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாண நீதி, நிர்வாக எல்லைக்குட்பட்ட சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்கள், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர்கள், நன்னடத்தை அதிகாரிகள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், சிறுவர் உரிமை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.

(204)

# புலிகள் மீது தாக்குதலைத் தொடருங்கள் நெருக்கடிக்குத் தீர்வுகாண அதுவே உதவும்

### சோமவன்ஸ அமரசிங்க வலியுறுத்து

விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துங்கள் அதுவே தற்போது உருவாகியுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தரும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

ஜே.வி.பி. ஏற்பாடு செய்த விசேட மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பு நகரில் நடைபெற்றது. இதில் அந்தக் கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க தமதுரையில் மேலும் கூறியதாவது:-

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை மிக மோசமாக இருக்கிறது. பயங்கரவாதத்தை நாம் தோற்கடிக்க வேண்டும். பயங்கரவாதம் எது என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும்.

நாம் இப்போது தற்காப்பு நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொண்டு வருகிறோம். இதன் மூலம் பயங்கரவாதத்தை வெற்றி கொள்ளமுடியாது.

யுத்தத்தின் மூலம்தான் நாம் நம்மை தற்காத்துக்கொள்ள முடியும். விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இதுதான் சரியான நேரம். எனவே அரசு இப்போது தாக்குதல் நடத்துவதற்கு தயாராக வேண்டும். இந்த நாட்டின் தலைவர் என்கிற முறையில் மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு.

அனைத்து சர்வதேச, உள்நாட்டு சக்திகளும் தனி ஈழத்தை அமைக்க விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உள்ளன. இலங்கையை ஒரு தோல்வி அடைந்த நாடு என்று அமெரிக்காவில் அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்று கூறி இருக்கிறது. ஜனாதிபதி ராஜபக்ஷவை நாங்கள் பாதுகாப்போம். அவருக்கு ஏதேனும் நிகழ்ந்தால் ஒரு ஆட்சியாளர் இல்லாத தோல்வி அடைந்த நாடாகத்தான் இலங்கை உருவாகும்.

இலங்கையில் இன்னும் விடுதலைப் புலிகளை தடை செய்யாமல் இருப்பது முட்டாள் தனம். விடுதலைப் புலிகளிடம் இருந்த ஆயுதங்களைக்களையும் வரை அவர்களுடன் பேச்சுக்குப் போகவே கூடாது - இவ்வாறு அவர் கூறினார்.

## உயிர்ப்பூட்டல் குழுத் தலைவர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை7

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் உயிர்ப்பூட்டல் குழுத் தலைவர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை கியூடெக்கின் ஜெபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 'தலைமைத்துவம் எதிர்கொள்ளும் அனர்த்த முகாமைத்துவம்', 'ஆவணப்படுத்தலும்' என்னும் தலைப்புக்களில் பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது. இந்தப் பயிற்சி நெறிக்கான வள அணியினராக திட்ட இணைப்பாளர் செல்வி பத்மா, உயிர்ப்பூட்டல் குழு இணைப்பாளர் ஜோசப் பாலா, ஆ.கருணாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(190)

### உதயவாக்கு

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேருகிறது என்பதல்ல. அதைக்கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான்.

- அல்டஸ் கெஸ்லி.

### நாளை

ஆனி - 24

சனிக்கிழமை

08.07.2006

திதி : துவாதசி

பிற்பகல் 12.13

நட்சத்திரம் : அனுஷம்

பிற்பகல்: 01.51

சுபநேரம் : 02.58- 4.28

ராகுகாலம் : 08.28 - 10.28

### நின்று உதவிடுவாள்

ஆதித் தமிழர்கள்
ஆழ்கடல் எங்கினும்
அலைந்து திரிந்து
பின்னர்...
ஆறுதல் காணவே
அன்று நயினையில் வந்து ஒதுங்கினராம்
மேவும் தமிழருக்கு
முன்பே அவர்க்காக
மேதினி போற்றும் எங்கள்
சோதி வடிவான
தாயும் குடிவந்து
காத்துக் கிடந்தனளாம் - பின்
வந்தத் தமிழர்க்கு
வாழும் வழிகாட்டி
என்றும் உதவியவள்
இவள்
எங்கள் தமிழரின்
இன்னல் துடைப்பவள்
என்றும் மறக்கிலோம் யாம்



இனி...
பொங்கும் தமிழர்க்கு
போகும் வழிகாட்டி
நின்று உதவிடுவாள்
பங்கம் விளைவிக்கும்
பாவிகள் யாரையும்
பார்த்து ஒதுங்கிவிடாள்
எங்கும் தமிழர்க்கு
இன்னல்வரின்
இவள்...
எல்லை கடந்திடுவாள்
தொல்லை புரிவோரை
தூரத் துரத்தியே
சொர்க்கம் படைத்திடுவாள்
அன்னை பராசக்தி
ஆகும் இவள் பாதம்
அன்[illegible] அடைவோம்.

- சி[illegible] பேனா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மீதான அச்சுறுத்தல் தொடர்ந்தால் பாடசாலைகளை மூடும் நிலை உருவாகும்

## யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை7

குடாநாட்டு மாணவர்களுக்கு எதிரான இராணுவ அச்சுறுத்தல்களுக்குத் தீர்வு கிடைக்காது விட்டால் பாடசாலைகளை மூடிவிடும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

யாழ். இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட இராணுவச் சோதனை நடவடிக்கைகளை கண்டித்து ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் இயல்பு வாழ்வு சிறிலங்கா இராணுவத்தினால் முடக்கப்பட்டு இருக்கும் நிலையில் பெரும் அச்சத்தோடு தமது நாளாந்தக் கருமங்களைத் தொடர்ந்து வருகின்ற குடாநாட்டு மக்களிடையே உயிரைக் கையில் பிடித்தவாறு மாணவர்கள் பாடசாலை சென்று கல்விகற்று வருகின்றார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இராணுவ நெருக்குவாரங்களுக்கு உள்ளாகி தனது அன்றாட செயற்பாடுகளை நகர்த்தி வந்தது. தின்மும் பாடசாலை வளாகத்தின் உள்ளும், பாடசாலை சுற்றாடலினுள்ளும் இராணுவம் ரோந்து செல்வதும் பாடசாலைக்குள் அத்துமீறி உள்நுழைவதும், மைதானத்தைப் பாவிப்பதிலோ துணைப்பாட விதானச் செயற்பாடுகளிலோ மாணவர்கள் பாடசாலை சூழலில் ஈடுபடுவதை தடுத்திருந்தது இராணுவம்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாடசாலைக்கு அருகில் இடம்பெற்ற குண்டுவீச்சு சம்பவத்தினைச் சாட்டாக வைத்து இராணுவம் பாடசாலை மாணவர்களை தாக்கியபடி உள்நுழைந்து ஆய்வுகூடத்தைச் சேதப்படுத்தியதோடு ஏனைய சொத்துக்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளது.

நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தினுள் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இராணுவம் அதிபர், ஆசிரியர்களை, மாணவர்களை மிக மோசமாக அச்சுறுத்தியதோடு பல மணி நேரமாக ஒளிப்படம் எடுத்துச் சென்றுள்ளனர்.

எந்நேரமும் இராணுவத்தினால் எதுவும் நிகழலாம் என அஞ்சிக் கொண்டிருக்க இராணுவம் ஆயுத முனையில் அராஜகம் நிகழ்த்தியது. இந்த நிலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை பெரும் பீதிக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தினை மாணவர்களாகிய நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். இராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் இந்துக்கல்லூரிக்கும், ஏனைய பாடசாலைகளுக்கும் இராணுவத்திடமிருந்து விடிவு கிடைப்பதை மாணவர்களும் ஏனைய கல்விச் சமூகத்தினரும் எதிர்பார்க்கின்றனர். இன்றேல் பாடசாலைகள் மூடப்படும் துர்ப்பாக்கிய நிலையே உருவாகும்.

எனவே; இராணுவத் தரப்பு தனது மனித உரிமை மீறல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இராணுவத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (204)

# இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஜுலை 7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் எதிர்வரும் பத்தாம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், பெண் நோயியல், வாய்ப்புற்றுநோய், பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படும்.

யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் டாக்டர் பவானி இந்தப் பரிசோதனை முகாமில் கலந்துகொள்ளவிருப்பதால் கர்ப்பிணித் தாய்மார்களைக் கலந்து பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கண் பரிசோதனை செய்து பார்வைக் குறைபாடுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 100 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன்.வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (204-117)

# பொதுக்கிணறு திருத்தும் திட்டத்தில் இணையாத விவசாயிகளின் கவனத்துக்கு

விவசாய நீர்ப்பாசன பொதுக் கிணறுகள் திருத்தி அமைக்கும் திட்டத்தில் இணைந்து கொள்ளாத விவசாயிகள் உடனடியாக புத்தூர் கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கோப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் நீர்ப்பாசனப் பொதுக்கிணறுகள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவினால் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. மூன்று பேருக்கு மேல் நீர்ப்பாசனம் செய்யும் கிணறு பொதுக் கிணறு என்ற அடிப்படையில் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

திருத்தி அமைக்கப்படும் கிணறுகளில் இணைப்புச்செய்வதற்கு நீர்ப்பாசனச் சாதனங்களும் அன்பளிப்பாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பிக்காத பொதுக்கிணறுகள் தொடர்பான விவரத்தை உடன் சமர்ப்பிக்குமாறு புத்தூர் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரன் கேட்டுள்ளார். (204-11)

# ஆங்கில ஆசிரியர் நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறும்

அச்சுவேலி, ஜூலை 7

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும் நாளையும் திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

• 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 180 நாள்கள் இடையீடு இன்றி கடமை புரிந்த 201 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களில் தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியல் மத்திய கல்வி அமைச்சினால் மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் திருகோணமலை மாகாண கல்வி அமைச்சில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன. சம்பந்தப்பட்டவர்களுக்குரிய கடிதங்கள் மாகாணக் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(204)

# கைதான இருவர் காங்கேசன் முகாமில்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

தென்மராட்சி புத்தூர் சந்தியில் படையினரால் கைது செய்யப்பட்ட இருவர் காங்கேசன் துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 27ஆம் திகதி அல்லாரையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான கணேசமூர்த்தி ஜெயரூபன் (வயது 23), மீசாலையைச் சேர்ந்த சிறுவனான கணபதிப்பிள்ளை கிரிதரன் (வயது 18) ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

காங்கேசன் துறை தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக மனித உரிமைகள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி மு. றெமிடியஸ் புலன் விசாரணை அதிகாரி மொறின் நிஷாந்தினி ஆகியோருக்கு கைது செய்யப்பட்டவர்களின் விவரம் தெரிவிக்கப்பட்டதாகவும் - அவர்கள் நேரில் தடுப்புக் கைதிகளை பார்வையிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(190-204)

# பாடசாலைகளில் குண்டு என்று வதந்தி பரப்பிய 12 பேர் கைது!

## குழப்பத்தை ஏற்படுத்திய மேலும் பலர் தேடப்படுகின்றனர்

கொழும்பு, ஜூலை 7

பாடசாலைகளில் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன என்று வதந்தி பரப்பி, புரளியை ஏற்படுத்திய 12 பேரைப் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர் என்று பாதுகாப்புத் துறை தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது:-

அநாமதேய தொலை பேசி அழைப்புகளை மேற்கொண்டு பாடசாலைகளில் குண்டுகளை வைத்துள்ளதாகப் புரளி ஏற்படுத்தியவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை நடத்திய விசாரணைகளிலிருந்து 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இதேபோல, இந்த வதந்திகளைப் பரப்பிய மேலும் பல சந்தேக நபர்களைத் தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்.

- என்றார் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல. (ஐ)


வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

9 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23.07.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

1. பிரேரணைகள் இன்றிலிருந்து 20.07.2006 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
2. அங்கத்துவத்தைப் புதுப்பிக்க வேண்டியவர்கள் புதுப்பித்துக் கொள்ளவும்

க.கோபாலகிருஷ்ணன்
செயலாளர்

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
100, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(51971)


# பதவி ஏற்பு வைபவம்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2006/2007 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை பதவி ஏற்பு வைபவமும், பதவிப் பிரமாண நிகழ்வும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் லயன்.ச.கனகரசன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக வடக்கு பிராந்திய பிரதி செயலர் டாக்டர் வி.யோகேஸ்வரன் கலந்து கொள்வார்.

கண்பார்வை குறைந்த வறுமைக் கோட்டுக்கு கீழே யுள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல், வலுவிழந்த ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கல் ஆகிய சேவைத் திட்டங்களும் இதில் இடம் பெறவுள்ளன.

(204-135)


யாழ்.மாவட்ட மட்ட சதுரங்கப் போட்டி - 2006

ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இளைஞர் சபையால் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் சதுரங்கப் போட்டியில் கீழ் காட்டப்படும் போட்டி விதிமுறைக்கேற்ப ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். போட்டிகள் அனைத்தும் இலவசமாகவே நடத்தப்படும்.

பிரிவு ஐ வயது 5-16 வரை
பிரிவு ஐஐ வயது 17-35 வரை

அருகே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை அ4 தாளில் பூர்த்தி செய்து தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'சதுரங்கப் போட்டி-2006' எனக்குறிப்பிட்டு, 14-07-2006ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தபாலில் அனுப்பி வைக்கவும்.

இளைஞர் சபை - வட பிராந்தியம்
ஸ்ரீ சத்திய சாயி சேவா
நிறுவனங்களின் இணைப்புக் குழு.

மாதிரி விண்ணப்பப் படிவம்:
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் வடபிராந்திய இளைஞர் சபை நடத்தும் யாழ்.மாவட்ட மட்டத்திலான சதுரங்கப் போட்டி -2006
முழுப்பெயர்:.......................................
விலாசம்:.......................................
வயது: ........... பிறந்த திகதி:................
தேசிய அடையாள அட்டை இல:
பாடசாலை மாணவராயின் பாடசாலையின் பெயர்: .......................................
......................
கையெப்பம்
அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர்,
வட பிராந்திய இளைஞர் சபை,
பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்,
# 166/5, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(51969)



மரண அறிவித்தல்

சின்னத்தம்பி இராஜேந்திரன்

[உரிமையாளர், மெக்கானிக் இராசர்] நிஷாந்தன் தொழிலகம், கே.கே.எஸ்.வீதி, மல்லாகம், முன்னாள் நெறியாளர் குழு [லேத்மன்] உறுப்பினர் காங்.தொகு.அபி.கூ.சங்கம்]



காளிகோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராஜேந்திரன் கடந்த (03.07.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவசம்பு - தங்கபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவமலரின் பாசமிகு கணவரும் சியாமளா, மஞ்சுளா, நிஷாந்தன் (அமரர், சுனாமி), லக்ஸ்சளா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமாரின் (ஹொலன்ட்) அன்பு மாமனாரும் சர்வின், தேனுஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் இராஜேஸ்வரி, தெய்வேந்திரன், சிவநேசன் (அமரர்), சிவதொண்டன், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சச்சிதானந்தம், வனிதாமணி, நிரஞ்சனாதேவி, குணசேகரம், சூரியகுமாரன், புனிதவதி, சறோஜாதேவி சிவகுமாரன், சிவஞானமலர், புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.07.2006) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'விக்னபவனம்'
காளிகோயிலடி, மல்லாகம்.

(51972)
(21.17.45)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

## மீண்டும் மிரட்டுகின்றது பிரான்ஸ் அணி இறுதியாட்டத்தில் இத்தாலியுடன் மோதல்



மிகவும் எதிர்பார்க்கப்படும் உலகக் கிண்ணக் கால்பந்து இறுதியாட்டத்தில் இத்தாலி, பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன. நேற்று முன்தினம் இரண்டாவது அரையிறுதியில் அணித்தலைவர் ஜிடேன் 'பெனால்டி' வாய்ப்பில் சாதுரியமாகக் கோல் அடிக்க, பிரான்ஸ் அணி போர்த்துக்கலை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதன் மூலம் பிரான்ஸ் அணி இறுதியாட்டத்திற்கு அசத்தலாக அடி எடுத்து வைத்தது. இத்தொடரில் கலக்கலாக ஆடிய போர்த்துக்கல் பரிதாப தோல்வியைச் சந்திக்க நேரிட்டது.

மியூனிச்சில் நடந்த பரபரப்பான இரண்டாவது அரையிறுதியில் முன்னாள் சம்பியன் பிரான்ஸ், போர்த்துக்கல் அணியை எதிர்த்தாடியது. இதில் வென்றால் இறுதியாட்டத்திற்கு முன்னேறலாம் என்பதால் இரு அணிகளும் ஆரம்பத்தில் இருந்தே அனல்பறக்க ஆடின. முதல் நான்கு நிமிடத்தில் மாறி மாறி தாக்குதல் நடத்தின. பிரான்ஸின் பிளாரன்ட் மலுடாவின் உதை கோல்கம்பத்தில் பட்டு விலகிச் சென்றது. அடுத்து போர்த்துக்கலின் டிகோ அடித்த பந்தை பிரான்ஸின் அனுபவ கோல்காப்பாளர் பார்த்தாஸ் அருமையாகத் தடுத்துவிட்டார். தொடர்ந்து போர்த்துக்கலின் மனிசே, கிறிஸ்டியானோ றொனால்டோ ஆகியோர் பந்தை தம்வசம் எடுக்க ஆட்டத்தின் ஒவ்வொரு நிமிடமும் பதற்றம் நிறைந்ததாக இருந்தது.



இந்த நேரத்தில்தான் பிரான்ஸின் வெற்றிக்கான அடித்தளமும் போர்த்துக்கலின் வெளியேற்றத்துக்கான சோக நிகழ்வும் அரங்கேறியது. ஆட்டத்தின் 33ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் தியரி ஹென்றி பந்தை மின்னல் வேகத்தில் கொண்டு சென்றார். பெனால்டி பகுதிக்குள் வைத்து இவரை, போர்த்துக்கல் தற்காப்பு வீரர் ரிக்கார்ட்டோ கார்வல்ஹோ முரட்டுத்தனமாக மடக்கினார். ஹென்றி கீழே விழ, அதை பார்த்த நடுவர் ஜார்ஜ் லாரியண்டோ பிரான்ஸுக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கினார். போர்த்துக்கல் நெஞ்சங்கள் தகர்ந்தன. சாதாரணமாகத்தான் தடுத்தார். இதற்கு போய் பெனால்டியா? என வாதம் செய்தும் பலன் கிடைக்கவில்லை. இப்போது போர்த்துக்கலின் நட்சத்திர கோல்காப்பாளர் ரிக்கார்டோ கையில் தான் ஆட்டம் இருந்தது. எதிரே இத்தொடருடன் ஓய்வுபெறவுள்ள பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் பந்தை அடிக்கிறார். பந்து பறந்து வருகிறது, அதன் திசையை சரியாக கணித்த ரிக்கார்டோ வலது பக்கமாக பாய்ந்து தடுக்க பார்த்தார். ஆனால், ஜிடேனின் உதை ரிக்கார்டாவை கடந்து கோல் ஆக, பிரான்ஸ் 1-0 என்ற முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்க போர்த்துக்கல் கடுமையாகப் போராடியது. பிகோ போன்றவர்கள் ஏமாற்றியதால், பிரான்ஸின் தற்காப்புப் பகுதியை அவ்வளவு எளிதில் தகர்க்க முடியவில்லை. முதல் பாதி பிரான்ஸின் முன்னிலையுடன் (1-0) முடிந்தது.

இரண்டாவது பாதியில் வெற்றிக்கு ஒரு கோல் போதும் என நினைத்து, பிரான்ஸ் தற்காப்பு ஆட்டம் ஆடியது. அதேநேரத்தில் போர்த்துக்கல் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. வீரர்களை மாற்றிப் பார்த்தும் அந்த அணிக்குப் பலன் கிடைக்கவில்லை. ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலுக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. தடையற்ற உதை வாய்ப்பில் கிறிஸ்டியானோ றொனால்டோ பந்தை அடிக்கிறார்.

பிரான்ஸ் கோல்காப்பாளர் பார்த்தாஸ் கையில் இருந்து நழுவிய பந்து மேலே செல்கிறது. இம்முறை பிகோ தலையால் முட்ட பந்து கம்பத்தில் பட்டு வெளியே செல்லப் போர்த்துக்கலின் அரிய வாய்ப்பு வீணாகியது. இரண்டாவது பாதி முடியும் நேரத்தில் போர்த்துக்கல் வீரர்கள் அடித்த பந்துகள் எல்லாம் கோல் கம்பத்துக்கு மேலே பறக்க வெற்றியும் காணாமல் போனது. ஆட்ட நேர முடிவில் பிரான்ஸ் அணி போர்த்துக்கலை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதியாட்டத்திற்கு அசத்தலாக நுழைந்தது.

FIFA WORLD CUP GERMANY 2006

தொகுப்பு அதிரன்

## 2010 உலகக் கிண்ணத் தொடர்; ஆரம்ப நிகழ்வுகள் இன்று

''மேன்மையான உலகிற்கான கால்பந்து ஜேர்மனியிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு'' என்ற கருத்துடன் 2010இல் தென்னாபிரிக்காவில் நடக்க உள்ள உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடருக்கான தொடக்க நிகழ்ச்சிகள் ஜேர்மனியின் பேர்லினில் இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஆபிரிக்க கால்பந்து ஜாம்பவான்கள் ஜோர்ஜ் வியா, ரோஜர் மில்லா, அபேதி பீலே ஆகியோர் பங்கேற்கின்றனர். அத்துடன்,ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கோபி அனான், தென்னாபிரிக்க அதிபர் தபோ மெபெகி, உலக கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜோசப் பிளாட்டர் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றி ரசிகர்களிடையே உரையாற்றுகின்றனர்.

நோபல் பரிசு பெற்றவரும் தென்னாபிரிக்க முன்னாள் அதிபருமான நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவிலிருந்து செய்மதித் தொடர்பு மூலமாக இந்நிகழ்ச்சியில் உரையாற்றுகின்றார்.

மாலை 6மணிக்குத் தொடங்கும் இந்நிகழ்ச்சிகள் நள்ளிரவு வரை நீடிக்கும். ஆபிரிக்க முக்கிய இசைக்குழுக்களுடன் ஜேர்மனி, தென்னாபிரிக்கா மற்றும் தென்னமெரிக்க கலைஞர்களும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ராட்சத திரைகளில் 2006ஆம் ஆண்டு உலகக் கிண்ண ஆட்டங்களின் முக்கிய நிகழ்வுகள் திரையிடப்படும்.

## அதிர்ச்சியால் 11 சீனர்கள் மரணம்

உலகக் கிண்ணக் கால்பந்துதாட்டத்தைப் பார்த்த சீனர்கள் 11 பேர் முக்கிய அணிகள் ஆட்டங்களில் தோல்வியுற்றதால் அதிர்ச்சியில் இறந்தனர் பீஜிங்கிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகமான களைப்பு மற்றும் மிகை உணர்ச்சியினால் இந்த மரணங்கள் ஏற்பட்டதாக நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.உலகக் கிண்ண ஆட்டங்களால் உலகெங்கிலும் அதிர்ச்சியால் ஏற்பட்ட மரணங்களில் சீனாவில் தான் அதிகம் ஏற்பட்டுள்ளதாக 'மோனிங் போஸ்ட்' என்னும் அப்பத்திரிகை தெரிவிக்கிறது. ஜேர்மனியில் நடைபெற்றுவரும் அவ்வாட்டங்களில் சீனா கலந்து கொள்ளாத நிலையில் இந்த மரணங்கள் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி, சீனா இடையிலான நேர வித்தியாசமும் இந்த மரணங்களுக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

## இத்தாலியின் இறுதியாட்டத்திற்கான பயணம்

உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில், இத்தாலி அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறும் என்பது பலரும் எதிர்பார்க்காத ஒரு சம்பவம்.

இத்தொடர் ஆரம்பிக்கும் முன், பிறேசில், ஆர்ஜென்ரீனா அணிகள் தான் இறுதியாட்டத்தில் விளையாடும் என்ற கருத்துப் பரவலாக இருந்தது. ஆனால், இவ்விரு அணிகளும் காலிறுதியிலேயே தோற்றதால், இறுதியாட்டத்திற்கு பலமிக்க ஜேர்மனி தகுதி பெறும் என கணிக்கப்பட்டது. ஆனால் அரையிறுதியில் இத்தாலி அணி, ஜேர்மனியை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்திப் பிரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

உலகக் கிண்ணத் தொடரில் இத்தாலி அணியும் பல முறை சாதித்துள்ளது. மூன்று முறை சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ள அதேவேளை, இரண்டு முறை இரண்டாம் இடமும் பெற்றுள்ளது. இம்முறை 'ஈ' பிரிவில் இடம்பெற்ற இந்த அணி லீக் சுற்றில் அதிக அனுபவமில்லாத அணிகளையே சந்தித்தது. முதல் லீக் ஆட்டத்தில் அறிமுக கானாவை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இரண்டாவது லீக் ஆட்டத்தில் அமெரிக்காவை 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை செய்தது. கடைசி மற்றும் மூன்றாவது லீக் ஆட்டத்தில் செக்குடியரசை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, 7புள்ளிகளுடன் 'ஈ' பிரிவில் முதலாமிடம்பிடித்தது.

இரண்டாவது சுற்றில், 32 ஆண்டுக்குப் பிறகு உலகக் கிண்ண வாய்ப்பு பெற்ற ஆஸ்திரேலியாவை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இவ்வாட்டத்தின் கடைசி நிமிடத்தில் வழங்கப்பட்ட பெனால்டி வாய்ப்பை கோல் ஆக்கி இத்தாலியை காலிறுதிக்கு அழைத்துச் சென்றார் டோட்டி. காலிறுதியில் இத்தாலியின் அதிர்ஷ்டம் அறிமுக உக்ரைன் அணியை சந்திக்கும்படி அமைந்ததுதான். இதில் 3-0 என்ற கோல் கணக்கில் எளிதாக வென்றது. இதையடுத்து அரையிறுதி ஆட்டத்தில் பலமிக்க ஜேர்மனியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இன்றுவரை அதை நம்ப முடியாமல் இத்தாலி ரசிகர்கள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

1994ஆம் ஆண்டிற்குப் பிறகு இத்தாலி அணி, 12 ஆண்டுகள் கழித்து உலகக் கிண்ண இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது. இதற்கு முழுமுதற்காரணம் பயிற்சியாளர் மார்செல்லோ லிபி தான். இவர் பயிற்சியாளராக பதவி ஏற்ற பின் இத்தாலி அணி பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த 24 ஆட்டங்களில் இந்த அணி ஒரு தோல்வியைக் கூடச் சந்திக்கவில்லை. தவிர, லிபியின் பயிற்சியில் இளம் வீரர்கள் முதல் அனுபவ வீரர்கள்வரை உச்சக்கட்டத் திறமையை வெளிக்காட்டி வருகின்றனர். டோனி, பியரோ போன்ற அதிரடி ஆட்டக்காரர்கள் லிபியின் கண்டுபிடிப்புகளே.

1982



1982இல் உலகக்கிண்ணத்தை வென்ற இத்தாலி அணி

2006



2006இல் இறுதியாட்டத்திற்கு [illegible] அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல் இத்தாலி அணியின் வெற்றி ரகசியம் மத்திய கள வீரர்களே. இப்பகுதியில் விளையாடும் அனுபவ வீரரான டோட்டி இம்முறை உலகக் கிண்ணத் தொடரில் அனைத்து ஆட்டங்களிலும் வெளுத்து வாங்கியிருக்கிறார். ஜேர்மனிக்கு எதிராகவும் தனது அபார ஆட்டத்தால் அணிக்கு பல கோல் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தவர். இப்பகுதியில் விளையாடும் மற்ற வீரர்களான ஜென்னாரோ கட்டுசோ, பிர்லோ இருவரும் அமர்க்களப்படுத்துகிறார்கள். எதிரணியிடம் பந்து சென்றால், இந்த மூவரும் சுற்றி வளைத்து எப்படியும் பந்தை கடத்திக்கொண்டு வந்து விடுவார்கள். எதிரணி வீரர்களுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தும் இவர்களால், இத்தாலி அணி தோல்வியைச் சந்திப்பதே கிடையாது என்றும் கூறலாம்.

இறுதியாட்டத்தைப் பொறுத்த வரையில் இத்தாலி அணிக்கு அதிக ராசி இருக்கிறது. ஐந்து முறை இறுதிக்கு தகுதிபெற்ற இந்த அணி மூன்று முறை கிண்ணத்தை வென்றுள்ளது. இரண்டு முறை மட்டுமே தோல்வி அடைந்துள்ளது. இந்த இரண்டுமே பிறேசில் அணியிடம் தான்.

இதனால் இம்முறை இத்தாலி அணி கிண்ணத்தை வெல்வதற்கும் வாய்ப்புள்ளது. ஜேர்மனிக்கு எதிராக வென்றதைத் தொடர்ந்து இத்தாலி வீரர்களின் புகழ் அவர்களின் சொந்த நாட்டில் பலமடங்கு அதிகரித்துள்ளது. எல்லா பத்திரிகைகளிலும் முதல் பக்கச் செய்தியாக இத்தாலியின் வெற்றிச் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தேவாலயங்களிலும் இத்தாலி ரசிகர்கள் தங்கள் அணி கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று இப்போதிலிருந்தே பிரார்த்தனை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இவையெல்லாம் இத்தாலிக்கு கைகூடுமா...? ரசிகர்களின் எதிர்பார்ப்பை இத்தாலி வீரர்கள் நிறைவேற்றுவார்களா...? இன்னும் இரண்டு நாள்களுக்கு பொறுத்திருந்து பார்ப்போமே!

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
**ஏகாதசி உற்சவம் -07-07-2006**

நிகழும் விய வருடம் ஆனி மாதம் 23ஆம் திகதி
மு.ப.10.30 மணிக்கு
ஏகாதசி உற்சவம் நடைபெறும்.
அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி
ஸ்ரீமந் நாராயணன் அருள் பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி
விலாச சம்பன்னாக வாழ்வீர்களாக.

(48971)(21.19.17) - **ஆதீன மகாசபை.**

---

சாவகச்சேரி - பெருங்குளம்
அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

**தேர்த் திருவிழா சிறப்பு நிகழ்வு**
**09-07-2006**

*அருள் ஆசி:* தேவஸ்தான பிரதம குருக்கள்
வேதாகம கிரியா கலாபூஷணம் ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தகுருக்கள்
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)
*ஆசியுரை:* மகோற்சவகுரு
சிவாகம கிரியா திவாகரன் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய கௌரிபாலக் குருக்கள்
(நெல்லியடி முருகமூர்த்தி தேவஸ்தானம், வடமராட்சி)
*நாதஸ்வரம்:* நாதஸ்வர சக்கரவர்த்தி
**திரு.கே.எம்.பஞ்சாபிகேசன்** குழுவினர்
(தென்மராட்சி, சங்கத்தானை, சாவகச்சேரி)
தேர்த் திருவிழா நேர்முக வர்ணனையாளர்
சைவப்புலவர், **திரு.க சி.குமலநாதன்** அவர்கள்
(சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்)

(51930)(21.19.17.24) - **தேர் திருவிழா உபயகாரர்.**

---

# சரத்பொன்சேகா மீது தாக்குதல் நடத்திய தற்கொலையாளி இனங்காணப்பட்டார்!

## அவர் கர்ப்பிணி அல்லர் என்கிறார் பொலிஸ்மா அதிபர்

இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மீது தாக்குதலை மேற்கொண்ட தற்கொலைக் குண்டுதாரி இனங்காணப்பட்டுள்ளார் என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில், இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கணபதிப்பிள்ளை மஞ்சுளா என்ற 32 வயதுடைய இப்பெண் இராணுவத் தளபதியை கொலை செய்வதற்காக சிங்கள மக்கள் அதிகமாக வசிக்கும் நம்புக்கணை மற்றும் கம்பஹா வெலிவேரிய ஆகிய பகுதிகளில் தங்கியிருந்தார் என்றும் அவரை இப்பிரதேசத்திற்கு அழைத்துவந்த தம்பதிகள் இருவரும் மற்றும் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இவர்களது போக்குவரத்துத் தேவைகளுக்காக விடுதலைப்புலிகள் அமைப்பு ஓட்டோ ஒன்றையும் வழங்கியிருந்தமை தமது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறிப்பிட்ட அப்பெண் கர்ப்பிணியல்லர் என மருத்துவ ஆய்வுகள் மூலம் தெரியவந்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையக வாசலில் வைத்து இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தாக்குதலுக்குள்ளானார்.

கடுமையான காயங்களுக்குள்ளான அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் இராணுவ வைத்தியசாலையிலும் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். தற்போது சிங்கப்பூரில் மேலதிக மருத்துவ சிகிச்சைகள் பெற்று வருகின்றார்.

இத்தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னேற்றகரமாக நடைபெற்று வருகின்றன என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## பொருள்கள் வாடகைக்கு வழங்கும்போது தேசிய அடையாள அட்டை பெறக்கூடாது

தேசிய அடையாள அட்டைகளைப்பெற்றுவிட்டு, பொருள்களை வாடகைக்கு வழங்குபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது அநேகமான இடங்களில் திரைப்படப் பிரதிகள், சீடிக்கள் மற்றும் மின்னியல் உபகரணங்கள் என்பனவற்றை வாடகைக்கு வழங்குபவர்கள், தேசிய அடையாள அட்டையைப்பெற்றுவிட்டே வழங்குகின்றனர்.

இவ்வாறு செயற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இது தொடர்பான தகவல்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுடன் அல்லது ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கமுடியும் என்று ஆட்பதிவுத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க)


மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே, டென்மார்க், லண்டன், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப்பொருள்கள், கடிதங்கள் ஆகியவற்றை நாமே பொதிசெய்து அனுப்புகிறோம். இதற்காக சிறிய கட்டணம் அறவிடப்படும். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஒரு கிலோவுக்குரிய கட்டணம் 1500 /= மட்டும்

ஏழு நாள்களில் பொதிகள் ஒப்படைக்கப்படும்

விசேட விலைக்கழிவு
5 கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு கட்டணம்
ஒரு கிலோவுக்கு லண்டன் 500
சுவிஸ் 650

RAINBOW TRAVELS & TOURS
32 -1/ 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 3237, 0777 328219
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)



உடனடி வேலைவாய்ப்பு

டோகா, கட்டார், டுபாய், சவூதிஅரேபியா, குவைத் ஆகிய நாடுகளில் உடனடிவேலை வாய்ப்பு
**ஒரு மாதத்தில் பிரயாணம்**

மேசன்வேலை, தச்சுவேலை, தொழிலாளர், துப்புரவுத் தொழிலாளர்கள், சாரதிகள், பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD), பிளம்பர், பொதி சுமப்பவர் (PORTER) ஆகியோருக்கு உடனடி வேலைவாய்ப்பு.

தொடர்புகளுக்கு: (சி-49951)(21.17.19)

RAINBOW TRAVELS & TOURS
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0777 328219, 021 222 3237.


### நன்றி நவில்கின்றோம்

கடந்த 06.06.2006 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவி
திருமதி
**உதயகுமாரன் வசந்தகுமாரி** (வசந்தி)

அவர்களின் மரணச்செய்தி அறிந்து இல்லம் வந்தும், தொலைபேசி மூலமும் எம்முடன் துயர்பகிர்ந்தும், மலர் வளையங்கள் வைத்தும், ஆறுதலும், தேறுதலும் கூறி பற்பல உதவிகள் புரிந்தும், இறுதி நல்லடக்க ஆராதனையிலும் அத்துடன் நேற்று (06.07.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்ற 31ஆம் நாள் நினைவு ஆராதனையிலும் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கும், சபையார்களுக்கும், ஊழியக்காரர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

86/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (51387)(21.19.17)

உதயகுமாரன்
(உதா)
குடும்பத்தினர்.

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

*மலர்வு* 10 - 08 - 1934



*உதிர்வு* 07 - 06 - 2006

*திருமதி* **விஜயலட்சுமி சிவசாமி**
(சரவணை மேற்கு - கொக்குவில்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை அன்போடும், பண்போடும் பாசத்துடனும்
அரவணைத்து எம்மை விட்டுப் பிரிந்து
அரனடி சேர்ந்த எம் அன்னையின் ஆன்மா
சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலியைச்
செலுத்துகின்றோம்

எமது அன்னை நோய்வாய்ப்பட்டு இருந்த சமயத்தில் உதவி புரிந்த அன்பர்கள், வைத்தியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், நலன்புரிச் சங்கத்தினர்க்கும் இறந்த பின்பு பாதுகாத்து வழங்கிய அன்புள்ளங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபங்களையும் உதவிகளையும் வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இன்று (07.07.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.09.கல்லூரி வீதி,
கொக்குவில். (51920)(21.17.19)

பிரிவால் துயருறும்:
*வி.சிவசாமி* (கணவர்),
*சி.இராகுலன் குடும்பம்* (மகன்).


ADMISSIONS OPEN

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !
அடுத்து என்ன ?

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான வாய்ப்பு
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் கௌரவமான வேலைவாய்ப்பு
- சொந்த மண்ணில் பெற்றோரின் அரவணைப்பில் உயர் கல்வி

பெற்றோர்களே !!
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த ஓர் எதிர்காலத்திற்கான முதலீடு HND

பதிவுகளுக்கு நீங்கள் முந்திக்கொள்ளுங்கள்

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு இறை நாமம்

தற்போது ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்ததும் அதற்கு என்ன பெயர் வைக்கவேண்டும் என்னும் பிரச்சினை போல் முன்பு கிடையாது. ஆண் குழந்தை பிறந்தால் பாட்டனார் பெயரை வைப்பார்கள். பெண் குழந்தை பிறந்தால் பாட்டியின் பெயரை வைப்பார்கள். அவை யாவும் தெய்வங்களின் பெயராகவே இருக்கும்.

ஆனால், தற்போது கடவுளின் பெயரை விட்டு வேறு என்ன நாகரிகமான பெயர் வைக்கலாம் எனக் குடும்பங்களில் தகராறு ஏற்படும். மேல்நாட்டார் போல் தங்களின் பிள்ளைகளுக்கும் பெயர் வைக்கவேண்டும் என்னும் மோகத்தால் நாம் உச்சரிக்க முடியாத பெயர்களை வைக்கிறார்கள். இது நாம் செய்யும் மாபெரும் தவறாகும்.

குழந்கைளுக்குக் கடவுளின் பெயரை வைக்கவேண்டும் என்று நம் மூதாதையர் கொண்டிருந்த வழக்கத்திற்கு ஓர் அடிப்படைக் காரணம் உண்டு.

**ஞானக்கதிர்**

எங்களுக்கு வயது ஆக, ஆக எமக்கு குடும்பத்தில் உள்ள பற்று, பாசம், பக்தி அதிகரித்து அவன் கழல் நாடவேண்டும். ஆனால், அதற்கு மாறாக இப்போது குடும்பத்தினரிடம் பற்று அதிகரிக்கின்றது. அதுவும் பேரன், பேர்த்தி மீது உள்ள அன்பு அதிகமாகின்றது. இந்தப் பாசத்தைப் பயன்படுத்தி நம் முன்னோர்கள் நம்மை ஆண்டவனை நினைக்க வைத்தார்கள் . பேரன், பேர்த்தியருக்குக் கடவுளின் பெயர்கள் வைத்தால் அந்தப் பெயரைச் சொல்லி அவர்களைக் கூப்பிடுவோம். அப்போது ஆண்டவன் ஞாபகம் வரலாம். அப்படி வராவிட்டால் கடைசிக் காலத்தில் ஆண்டவன் நாமங்களைத் தெரிந்தோ தெரியாமலோ சொன்னாலும் முத்தி உண்டு என்கிறார்கள் பெரியோர்கள். ஆனபடியால்தான், மரணத்தறுவாயில் இருக்கும் ஒருவருக்கு எமது முன்னோர்கள் அவர் காதிற்குக்கிட்ட வாயை வைத்து ஓம் சிவாயநம என்னும் மந்திரத்தை ஓதுவார்கள்.

பாகவதத்தில் வரும் அஜாமிளன் கதை இதற்குச் சான்று பகருகின்றது.

அஜாமிளன் என்னும் பாவி ஒருவன் சாகும் தறுவாயில் இருக்கிறான். யமதூதர்கள் அவன் முன்னே நிற்கிறார்கள். அவனுடைய இளையமகன் நாராயணன் தூர விளையாடிக்கொண்டு நிற்கின்றான். உடனே தன் மகனை நாராயணா நாராயணா என்று உரக்கக் கூப்பிடுகின்றான். உடனே விஷ்ணு தூதர்கள் ஓடிவந்து யமதூதர்களைத் தடுக்கின்றார்கள்,இரண்டு பிரிவனருக்கிடையே ஒரு வாக்குவாதம் நடைபெறுகின்றது. இதோ வருமாறு:-

யமதூதர்கள்:- யமதர்மராசாவின் ஆணைக்குத் தடையாக நிற்கும் நீங்கள் யார்?

விஷ்ணு தூதர்கள்:-நாங்கள் விஷ்ணு தூதர்கள். நீங்கள் யமதூதர்களாக இருந்தால் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். மனிதர்களில் எல்லாப் பாவிகளும் தண்டிக்கப்பட வேண்டியவர்களா? அல்லது சிலர் தானா?

யமதூதர்கள்:- இவன் மிகப்பெரிய பாவி ,அதனால் இவனைத் தண்டிக்க யமதர்மனிடம் இழுத்துச் செல்கின்றோம்.

விஷ்ணு தூதர்கள்:-இவன்பாவியல்ல இவன் தன்பாவங்களுக்கு எல்லாம் பிராயச்சித்தம் செய்துவிட்டான்.

யமதூதர்கள்:-எப்படி?

விஷ்ணு தூதர்கள்:-எப்போது நாராயணா என்று பகவானுடைய நாமத்தைச் சொன்னனோ அப்பொழுதே அவன் கோடி ஜென்மங்களிற்செய்த அத்தனை பாவமும் போய்விட்டது.

யமதூதர்கள்:-அவன் பகவான் நாராயணனைக் கூப்பிடவில்லையே. தன் மகன் நாராயணனை அல்லவா கூப்பிட்டான்.

விஷ்ணு தூதர்கள்:-இருக்கட்டுமே! தெரிந்தோ தெரியாமலோ நெருப்பிற் கையை வைத்தால் அது கட்டாயம் சுடும். அதேபோலப் பகவானுடைய நாமமும் தெரிந்து சொன்னாலும் பலன் உண்டு. தெரியாமற் சொன்னாலும் பலன் உண்டு. அதனால் அவனை விட்டுவிடுங்கள் - என்கிறார்கள்.

யமதூதர்கள் அஜாமிளனை விட்டுவிட விஷ்ணு தூதர்கள் அவனை வைகுண்டம் அழைத்துச் சென்றார்கள்.

தவறுதலாகவாவது நாம் இறைவன் நாமங்களைச் சொல்லவேண்டும் என்று தான் நம் மூதாதையர் இறைவன் பெயர்களை நமது குழந்தைகளுக்கு வைத்தார்கள் . ஆனால், தற்போது அப்பழக்கம் அருகி வந்துவிட்டது.ஆனபடியால் இனி மேலாவது நாம் எல்லோரும் நம் குழந்தைகளுக்கு இறைவன் நாமம் இட்டு இறைபதம் அடைவோமாக.


(நன்றி : ஞானச்சுடர்)

# தெய்வீகஸ்தலங்களில்



நெடுந்தீவு - பெருக்கடி சித்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது.அந்தணச் சிவாசாரியார்கள் அபிஷேக கும்பங்களைச் சுமந்து வருவதை முதலாவது படத்திலும் விமானத்திற்கு அபிஷேகம் செய்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)





திருநெல்வேலி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பரம் அண்மையில் வெள்ளோட்டம் விடப்பட்டது. ஈழத்தில் எங்குமில்லாதவாறு முற்றிலும் இரும்பினால் நிர்மாணிக்கப்பட்ட சப்பரம் வெள்ளோட்டத்தன்று வீதியுலா வருவதை முதலாவது படத்திலும் சப்பரத்தின் முழுமைத்தோற்றத்தை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# வாராந்த சமயச் செற்பொழிவுகள்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'ஔவை நற்பயன்' என்னும் தலைப்பில் செல்வி ரம்யா சொற்பொழிவாற்றவுள்ளது. (173-203)

*** *** ***

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயச்சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் இடம்பெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'வாழ்க்கையில் நான்கு தர்மங்கள்' என்னும் தலைப்பில் ஆசிரியர் இரா.திருமாறன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (203-173)

# வாசகர் திருமுகம்

## மின்மானி பொருத்துவது எப்போது?

வாரணிப் பிரதேசத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு மின்மானி பொருத்தப்படாது பல வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. இப்படி மின்சாரம் கிடைத்த வீடுகளுக்கு மின் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்ட தொகை தொடர்ந்து மாற்றம் இல்லாமல்அறவிடப்பட்டு வருகிறது. அண்மைக்காலமாக மின்தடை நடைமுறைப்படுத்தப்படும் நிலையிலும் மின் கட்டணத்தொகையில் எதுவித மாற்றமும் இல்லை. அண்மையில் மின்கட்டண வீதம் உயர்த்தப்பட்ட போதும் கட்டணத்திலும் அதற்கேற்றவாறு அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் இப் பிரதேசத்தில் பல வீடுகளுக்குப் புதிதாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. அப்படி வழங்கிய வீடுகளுக்கு மின்மானியும் பொருத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் முன்னர் மின் இணைப்புப் பெற்றவர்கள் விடயத்தில் சபையினர் மின்மானி பொருத்த நடவடிக்கை எடுக்காதது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

மின்மானி பொருத்தப்படாது பாதிப்புற்றவர்கள் சாவகச்சேரி மின்சார சபை அலுவலகத்தை அணுகி தமது பாதிப்புப் பற்றி கூறும்போது மின்மானி கைவசம் இல்லை என்று பதில் கூறப்படுகிறது.

மின்மானி பொருத்தப்பட்ட வீடுகள் மாதமாதம் பாவிக்கப்பட்ட அலகுக்ளுக்கு மட்டுமே கட்டணம் செலுத்தும் போது மின்மானி பொருத்தப்படாதவர்கள் ஒரே தொகையைச் செலுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

மின்மானி கைவசம் இல்லை எனக் கூறுபவர்கள் தற்சமயம் மின் இணைப்பு வழங்கும் வீடுகளுக்குப் பொருத்த மின்மானி எங்கிருந்து பெறுகின்றனர். எனவே, மின்சார சபையினர் சம்பந்தப்பட்ட வீடுகளுக்கு மின்மானி பொருத்த நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களின் நலனில் நன்மை புரியவேண்டும்.

- பாதிப்புற்ற வீட்டு உரிமையாளர்.

## ஒளிபெறுமா மிருசுவில் வடக்கு

யுத்த வடுதாங்கிய கிராமங்களில் மிருசுவில் வடக்கும் ஒன்று. விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்ட மக்கள் அதிகம் வாழும் இக்கிராமம் இருளிலேயே உள்ளது. மின்சாரம் இல்லாததால் மக்கள் அதிக இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். அண்மையில் மின்சாரம் வழங்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால், மின்சார இணைப்பு செயற்பாடுகள் மிகமிகத் தாமதமாகவே நிகழ்கின்றன. பிரதான கம்பம் பொருத்தி இற்றைக்கு ஒரு வருடம் ஆகின்றது. சிறிய கம்பங்கள் எவையும் நடப்படவில்லை. அண்மையில் அடுத்த வாரமளவில் மிருசுவில் வடக்கிற்கு மின்சாரம் வழங்கப்பட உள்ளதாகச் செய்தி வெளியானது. இச் செய்தி வந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகின்றது. இன்னும் சிறிய கம்பம் எவையும் நடப்படவில்லை. மாணவர்கள், மக்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கக் காலத்தை தாழ்த்தாது விரைவாக மின்சாரம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மிருசுவில் வடக்கு. ந.பிரசாந்தன்

## முதியோரின் தேவை கவனிக்கப்படுமா?

முதியோரைக் கவனித்துப் பராமரிக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பு என்று பல இடங்களிலும் பேசப்படுகிறது. அவர்களுக்கு என்ன தேவை என்பதில் போதிய விழிப்புணர்வு சமூகத்தில் இல்லாதது கவலை தரும் விடயமாக உள்ளது.

நேரத்திற்கு உணவு, நோய்க்கு மருந்து, உடை, தங்குமிடம் என்பன மட்டும் முதியோருக்குள்ள தேவைகள் என்பது பொதுவான கருத்து. ஆனால், சமூகத்தில் அவர்களுக்குரிய அந்தஸ்த்து அவர்களால் சமூகம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுபவ அறிவு, விருப்பமான பொழுதுபோக்கு, அவர்களுடைய தொடர்பாடலுக்கான ஏற்பாடு, விரும்பிய இடங்களுக்கான போக்குவரத்து போன்றவை மறுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

தற்போது முதியவர்களுக்குத் தொல்லை கொடுப்பது அவர்களுக்குச் செய்ய வேண்டிய முடி திருத்தல், முகச்சவரம் போன்றவை. அத்தொழில் செய்வோர் வீடுகளுக்குச் செல்வதில்லை. எல்லா முதியோரையும் சலூன்களுக்குக் கொண்டுபோக முடிவதில்லை. கொண்டுபோக விரும்பினாலும் ஞாயிற்றுக்கிழமைகளில் சலூன்கள் பூட்டுவதன் காரணமாக எல்லோருக்கும் கிழமை நாள்களில் நேரம் இல்லை. இது நாம் முதியோருக்குச் செய்யும் ஒரு தீமை.

இதற்கு ஒரு தீர்வு கணப்பட்ட வேண்டியது அவசியமான விடயம். நிறுவன மயப்படுத்தப்பட்ட விதத்தில் முதியோர்களின் விவரங்களைச் சேகரித்து தேவையானவர்களுக்கு இதற்கென வடிவமைக்கப்பட்ட வாகனங்களை ஒழுங்குசெய்து மேற்சொன்ன குறைகள் ஏற்படாமல் செய்யவேண்டும்.

கொக்குவில். வை.சந்திரபாலன்

## புகையால் விளையும் கேடு!

புகைத்தல் மனித உயிருக்கு கேடு எனப் பிரசாரம் செய்யப்படுகிறது. மருத்துவ ஆய்வு அறிக்கைகளின் படி புகைப்பவரை விட அவர் வெளிவிடும் புகைகளைச் சுவாசிப்பவருக்கே பெரும் ஆபத்து எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் உணவகங்கள், தேநீர்ச்சாலைகள் போன்ற இடங்களில் அமர்ந்து பலரும் தாரளாமாகப் புகை பிடிக்கின்றனர். புகைப் பிடிக்காதவர்கள் இந்த இடங்களில் தேநீர் அருந்தவோ உணவு உண்ணவோ செல்கின்றனர். அவர்களின் அருகே அல்லது எதிரே புகை பிடிப்பவர் அமர்ந்து புகை பிடித்துத் தாரளாமாகப் புகையை வெளியேவிட்டு வருகின்றனர்.

உணவகங்களிலும் தேநீர்ச்சாலைகளிலும் சுகாதாரம் பேண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.ஆனால், இந்தப் புகைப்பிடிப்பு சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

தற்போது புகைத்தல் தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதன் போதாவது உரிய அதிகாரிகள் உணவகங்கள் மற்றும் தேனீர்ச்சாலைகளில் புகைத்தலை தடைசெய்யலாம். குறைந்தது புகைத்தலுக்குத் தனியிடம் ஏற்படுத்துவதையாவது சீட் [illegible]லாம்.

இதன் மூலம் புகை பிடிக்காதவர்கள் புகையால் படும்பாட்டைத் தடுக்கலாம்.

பருத்தித்துறை. - சுந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

**ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

**தகைமைகள்:-**

**(01) கல்வித் தகைமை:-**
க.பொ.த. உயர்தரத்தில் தமிழ்மொழியுட்பட மூன்று பாடங்களிலும் பொது அறிவிலும் தேறியிருத்தல் வேண்டும்.

**(02) அகவை:-** 01.01.1984 இற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

01. வேண்டுகை முடிவுநாள் :- 12-07-2006
02. நேர்காணல் நடைபெறும் நாள்:- 14.07.2006 முற்பகல் 10 மணி
03. நேர்காணல் நடைபெறும் இடம்:-
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
04. நேர்காணலுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ் (க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம்), பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றையும், அவற்றின் நிழற்படிகளையும் கொண்டு வருக.
05. வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
06. பயிற்சிக் காலம் :- ஓர் ஆண்டு
07. பயிற்சியின் பின் ஐந்தாண்டுகள் நிதித்துறையில் பணியாற்றுதல் வேண்டும்.
08. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் பொருத்தமான பணி வழங்கப்பெற்று, நிதித்துறை சம்பளத்திட்டத்திற்கமைவாக சம்பளம் வழங்கப்படும்.
09. தமிழ்மொழியில் பற்றுடையவராகவும் ஆற்றல் உடையவராகவும் தொடர்ந்து கற்கும் விருப்பமுடையவராகவும் அடையாளம் காணப்படுவோர் தமிழில் சிறப்புக் கல்வியை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பெறும்.
10. கல்விச் செலவுகள் அனைத்தையும் நிதித்துறை பொறுப்பேற்கும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

(சி/49953)

## கணனி உபகரணங்கள் திருட்டு

சாவகச்சேரி சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் கணனி உட்பட பெறுமதிமிக்க உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளன.

சாவகச்சேரி வினாசித்தம்பி வீதியில் உள்ள சங்கத்தின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சமுர்த்தியாளர்கள் பற்றிய விவரங்கள் கணனியுடன் திருடுப்போயுள்ளதால், இத்திருட்டுத் தொடர்பான தகவல்கள் கிடைப்பவர்களை தங்கள் பிரிவு சமுர்த்தி அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (117)

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் திருமதி கே. ஹேமலதா பண்டத்தரிப்பு ஆயுள்வேத மத்திய மருந்தகத்திற்கு கடந்த மாதம் முதல் வடக்கு - கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (135)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிராம்பியடி வீதி, யாழ்ப்பாணம் (off Stanly Rd.)
021-222 8250, 0777- 222422
Diploma in Computerized Accounting
Accpac+QuickBooks Premier+MYOB
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.
Tally Accounting Package
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
வகுப்புக்கள் ஆரம்பம் :
08/07/2006 11.30am
09/07/2006 02.30pm
காலம் : 3மாதம்
Course Contents
❖ Fundamentals of IT, ❖ Manual Accounting, ❖ Financial Accounting, ❖ Cost Accounting, ❖ Taxation (Including VAT), ❖ Stock Control, ❖ Bank Reconciliation, ❖ Budgeting, ❖ Fore Casting, ❖ Business Planing

## முதலாம் வருட நினைவஞ்சலி



**செல்வி சாந்தா பொன்னம்பலம்**

அமரத்துவம் அடைந்த திகதி: 08.07.2005

பதுளையில் பிறந்து வளர்ந்த என் அன்புச் செல்வமே!
நீ மறைந்து ஆண்டு ஒன்று சென்றாலும் உன் நினைவு
என் வாழ்நாள் வரை என்னை விட்டு அகலாது
அப்பாவை மறந்து எப்படித் தான் சென்றாயோ?
அக்காவை மட்டும் ஆறே மாதத்தில் உன்னுடன் அழைத்துக் கொண்டாய்
அப்பாவுக்கு இங்கு யாரம்மா துணை நிற்பார்?
பெயருக்கு ஏற்றவாறு உந்தன் சாந்தகுணம் யாருக்கம்மா வரும்
மாதம் ஒரு நாள் மங்கல பூரணை நன்னாளில்
காயத்திரி நாமம் செபிப்பதற்கு கருத்துடன் உதவி செய்வாய்
அக்காவையும் அழைத்து அவவையும் உதவி செய்ய வைப்பாய்
நூலறுந்த பட்டம் போல் அலைந்து உழலுகின்றேன்
உனது இறுதி வேண்டுதலை நிறைவேற்றி வைப்பேன் அம்மா!
உங்களுக்கு உரியவற்றை நல்லூரான் சந்நிதியில்
சமர்ப்பிக்க துடிக்கின்றேன். சமர்ப்பிப்பேன் வெகு விரைவில்
உங்கள் ஆத்ம சாந்திக்கு நல்லூரானை வேண்டுகின்றேன்
நற்கருணை கிடைக்கட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

திருப்பதி,
கே.கே.எஸ்.வீதி,
இணுவில், சுன்னாகம்.


தந்தை
A.S.பொன்னம்பலம்.

(51863)(21-32-17-11)

# மரண அறிவித்தல்

## இரத்தினசாமி சுப்பிரமணியம் (சுப்பண்ணா)

### (நியூ லக்சுமி சில்க் உரிமையாளர், பருத்தித்துறை)



யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஐயனார் கலட்டியைச் சேர்ந்த இரத்தினசாமி சுப்பிரமணியம் அவர்கள் 30.06.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசாமி - தங்கராணி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் - இராஜேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் முகுந்தன் (லண்டன்), விஜிதா (பிரான்ஸ்), சகுந்தலா (நியூஸிலாந்து), ரமணன்(பிரான்ஸ்), ஜெகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவானந்தராஜா (பிரான்ஸ்), பிரேமினி (லண்டன்), பரணீதரன (நியூஸிலாந்து), சுகாணா(பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் அன்பு மாமனும் இராசநாதன், சிவநாதன், காலஞ்சென்ற செல்வநாதன் இராசலட்சுமி, தங்கராணி, குணசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவத்திரா, சிவனிசா, சிவாசன், துகாயினி, மதுஷா, கிருஷ்னி, ஆதி, தமிழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2006) காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார்கலட்டி,
பருத்தித்துறை.

(51923)(21-32-11)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு விடுதலை இராணுவத்தின் பலமே காரணம்

## அதைப் பலப்படுத்த ஒன்றுபடுமாறு பொட்டு அம்மான் அழைப்பு



கிளிநொச்சி,ஜூலை7

தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு விடுதலை இராணுவத்தின் பலமே காரணம். அதனைப் பலப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இந்தப் பலமே தமிழ் மக்களின் அமைதியான வாழ்வுக்கு வழிகோலும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான்.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் போரின் ஒரு திருப்புமுனைக்கு உரிய கட்டத்தில் பலமே எமது வாழ்வை நிர்ணயிக்கமுடியும்; நிர்ணயிக்க வேண்டும் என்ற நம்பிக்கை எழுந்துள்ள நிலையில் தாயகத்தில் பலமாவோம் என்று உங்களைச் சந்திக்கின்றோம்.

எமது விடுதலையை, எமது மக்களின் அமைதியான வாழ்வை, நிர்ணயிப்பதும், தீர்மானிப்பதும் எமது பலம். எமது பலமே மக்களுக்கான அமைதியான வாழ்வை உருவாக்க முடியும்.

உலக ரீதியாக சமாதானத்தின் அடிப்படையின் தரவாக சமாதானத்தின் அடிப்படையாக பலமே இன்று விளங்குகின்றது.

தமிழ் மக்கள் பலவீனமாக இருந்த காலத்தில் எல்லாம் தமிழர்கள் அடிக்கப்பட்டார்கள், உதைக்கப்பட்டார்கள், வெட்டப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், எரிக்கப்பட்டார்கள்.

ஆனால், இன்று எமது இயக்கமும், தமிழீழ மக்களின் விடுதலை இராணுவமும் பலமடைந்த வேளையில் எமது மக்கள் எங்கிருப்பினும் அவர்கள் தலைநிமிர்ந்து பெருமிதத்துடன் பெருமையுடன் வாழமுடிகின்றது.

நாம் வெற்றியைப் பெறுவதற்குத் தடையாக இருக்கும் முக்கிய இலக்குகளை அழிப்பதற்கு கரும்புலிகள் தமது உயிரை ஈகம் செய்கின்றனர்.

எமது விடுதலைக்கான தடை ஒவ்வொன்றையும் அகற்றத் தாயகத்திற்கான வெற்றி ஒன்றைப் பெற்றுத்தர இளைய கரும்புலி வீரர்கள் பயணம் புறப்படப் போகிறார்கள்.

அவர்களை வழியனுப்புகின்ற நெஞ்சு கனக்கின்ற வேளையில் எமது தமிழ் மக்களின் பலமெல்லாம் தமிழ் மக்களின் சக்தியெல்லாம் இந்த இளைய வீரர்களுக்குப் பின்னால் நிற்குமாக இருந்தால், இவர்கள் இன்று தமது உயிரை விலைகொடுக்க வேண்டியதில்லையே என்று எண்ணுவதுண்டு.

இதுபோன்ற உயிர் விலைகள் நாளையும் கொடுக்கப்படத்தான் வேண்டும். அந்த உயிர் விலைகளை இல்லாமற் செய்வதற்கு அல்லது குறைத்துக்கொள்ள நாம் ஆயுத ரீதியாகவும் ஆய்வு ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் பலம்பெறவேண்டும்; வளம் பெற வேண்டும்.

அதற்குப் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் ஆகிய நீங்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டும். விடுதலை இயக்கத்தைப் பலமாக்க வேண்டும் - என்றார்.

(203)

# சுதேச மருத்துவர்களின் கடமை விவரம் வெளியீடு

கிளிநொச்சி,ஜூலை7

சுதேச மருத்துவர்களுக்கான கடமை விபரங்கள் தொடர்பான அறிவுறுத்தல் ஒன்றைத் தமிழீழ சுகாதார சேவையினர் விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

✱ சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், சுதேச மருத்துவக் கல்லூரி ஆகிய நிலையங்களில் பட்டம் பெற்று சான்றிதழ்கள் உள்ளவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆங்கில மருந்துகள் பாவிக்க அனுமதிக்கப்படுவர்.

✱ ஹோமியோபதி வைத்தியர்கள் - ஹோமியோபதி மருந்துகள் மட்டுமே பாவிக்கவேண்டும்.

✱ ஏனைய சுதேச வைத்தியத்தின் பரம்பரை வைத்தியர்கள் - பதிவுசெய்யப்பட்டவர்கள், பதிவு செய்யப்படாதவர்கள் சுதேச மருந்துகளை மட்டுமே பாவனையில் செயற்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும். (203)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

# டெங்கு நோயைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## தமிழீழ சுகாதார சேவையினர் மக்களிடம் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூலை7

தாயகப்பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டெங்கு நோயின் தாக்கமும் உயிரிழப்பும் சிறிலங்காவின் பல பகுதிகளிலும், தென் இந்தியாவிலும் அதிகரித்து வருகின்றது. எமது வன்னிப்பிராந்தியத்தில் டெங்கு நோய்க்கிருமிகளைக் காவும் நுளம்புகளின் அடர்த்தி எம் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருப்பது எமது அண்மைய பூச்சியியல் ஆய்வுகளிலிருந்து தெரிகின்றது. எனினும் வெளி இடங்களிலிருந்து வருபவர்கள் காய்ச்சல் நோயால் பாதிக்கப்படுபவராயின் அது டெங்கு நோயாக இருக்கலாம் என்பது பற்றி நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.

இந்நோய் நகர்ப்புறங்களிலேயே பரவும் அபாயம் அதிகமாகவுள்ளதால் வீட்டுச்சூழலில் நன்னீர் தேங்கும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள், சிரட்டைகள், ரயர்கள், பொலித்தீன் பைகள் போன்றவற்றை அகற்றி டெங்கு பரப்பும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி இந்நோய் பரவலிலிருந்து எமது தாயகப் பிரதேசத்தைப் பாதுகாக்க ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம் - என்றுள்ளது.

(203)

# அரைக்கும் ஆலைகளில் சுகாதார நடைமுறை பேணும்படி அறிவுறுத்தல்

வெள்ளாங்குளம்,ஜூலை7

அரைக்கும் ஆலைகள் சுகாதார நடைமுறைக்கு அமைவாக சீர்செய்யப்பட வேண்டும் என்று தமிழீழ சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சுகாதாரப் பிரிவினர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

✱ ஆலைகளின் உள்ளும் புறமும் தூய்மையாக இருக்க வேண்டும்.

✱ பணியாளர்கள் மேல் அங்கிகள் அணிந்திருக்க வேண்டும்.

✱ பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

✱ பிரதேச சபையினரின் கட்டட அனுமதியைப் பெற்றிருப்பதுடன், சுகாதார சேவையினரின் நடப்பாண்டுக்கான உரிமத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

✱ உரிகள் வெளிக்காற்றுடன் தொடர்புபடா வண்ணம் தற்காலிக அறைகள் அமைக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

(203-415)

## புகை, மதுவிலிருந்து மாத்திரமின்றி

# யுத்தத்திலிருந்தும் இளைஞர்களைப் பாதுகாக்க ஜே.வி.பி. சகோதரர்கள் முன்வரவேண்டும்!

## சபையில் ரவிராஜ் எம்.பி. அழைப்பு

மது, புகைத்தல் போன்றவற்றிலிருந்து இந்நாட்டின் இளைய சமுதாயத்தைக் காப்பாற்ற நினைக்கும் ஜே.வி.பி. சகோதரர்கள் யுத்தத்திலிருந்தும் இளைய சமுதாயத்தைக் காப்பாற்றும் வகையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இடையூறாக இருக்காமல், தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை சட்டமூல விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே ரவிராஜ்எம்.பி. இவ்வாறு கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது.

வாய்மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தின் பின்னர் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை சட்டமூலம் மீதான விவாதம் நடைபெற்றது. இவ்விவாதத்தில் உரையாற்றிய அனைத்து எம்.பிக்களும் புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகள் நோயுற்றவர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களைத் தெரிவித்து உரையாற்றினர்.




இருந்தும் இந்நாட்டின் புகையிலைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள், டுபாக்கோ கம்பனிகளில் தொழில் புரியும் ஊழியர்கள் குறித்து நேற்றுமுன்தினம் என்.ரவிராஜ் எம்.பி. மாத்திரமே உரையாற்றினார்.

புகையிலை மற்றும் மதுவகைகளின் பாவனையை குறைக்க சட்டம் கொண்டு வரும் அதேவேளை புகையிலை விவசாயிகள் மற்றும் டுபாக்கோ கம்பனிகள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டுமென்றார் ரவிராஜ் எம்.பி.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையில் தேசிய என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சொல்லின் பொருளுக்கேற்றவாறு இச்சபை உறுப்பினர்கள், தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களும் நியமிக்கப்பட வேண்டும். அதேபோல், புகையிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலில் ஹெல உறுமயவினர் செய்த ஒரே யாரு உருப்படியான செயல்!

## ஐ.தே.கவின் ராஜித சொல்கிறார்

கொழும்பு, ஜூலை7

மது மற்றும் புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான தேசிய அதிகாரசபை சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் மூலம் ஜாதிக ஹெல உறுமயவினர் இந்த நாட்டுக்குப் பெரும் உதவி செய்துள்ளனர். அரசியலுக்கு வந்த காலத்தில் இருந்து ஜாதிக ஹெல உறுமயவினர் செய்த ஓர் உருப்படியான வேலை இதுதான். இந்த நாட்டுக்கு இதையாவது செய்தார்களே என்று எண்ணி நாம் பெருமைப்படுகிறோம். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம் பெற்ற புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார். அவர்தொடர்ந்து கூறுகையில்,

மதுபாவனை இந்த நாட்டில் பெரும் பிரச்சினையாகவுள்ளது. அதைக்கட்டுப்படுத்துவதற்காக இப்போது நாடாளுமன்றில் சட்டமூலம் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு விடயம்.

பொதுவாக நாட்டில் கசிப்பு உற்பத்தியும் அதன் பாவனையும் அதிகரித்துள்ளது. சுகாதாரத்திற்குக் கேடுவிளைவிக்கும் இவ்வுற்பத்தியைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது ஆட்சியின்போது நான் அமைச்சராக இருந்தவேளை எனது களுத்துறை மாவட்டத்தில் கசிப்பு உற்பத்திகளைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்தேன். அதை வெற்றிகரமாகச் செயற்படுத்தி பல சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளைத் தடைசெய்தேன்.

இந்தக் கசிப்பு உற்பத்திகளை முற்றாகத் தடைசெய்யவேண்டியது அரசின் கடமை. இந்தநிலையில் இதைக் கட்டுப்படுத்த இப்போது சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் வரவேற்கத்தக்கது. இச்சட்டமூலத்தைக் கொண்டு வரக் காரணமாகவிருந்த ஜாதிக ஹெல உறுமயவினருக்கு எனது நன்றிகள். அரசியலுக்கு வந்ததிற்கு அவர்கள் செய்த உருப்படியான வேலை இதுதான்- என்றார்.

# நாட்டின் நிதி முகாமைத்துவம் சீரில்லாததால் மக்களின் வாழ்க்கைச்செலவு அதிகரித்திருக்கிறது

## அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

நாட்டின் நிதிமுகாமைத்துவம் முறையாக பேணப்படாததன் காரணமாக கடந்த மாதம் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 17.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எதிர்க்கட்சி பிரதம கொரடா ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி. நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

அரசின் அன்றாடத்தேவைகளுக்காக அதிகவட்டி வீதத்தில் டொலர்களில் வர்த்தகக் கடனைப் பெறுவதும் நாளாந்தம் அதிகரித்து வருகிறது. மத்திய கிழக்கு உட்பட வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின்வெளிநாட்டு நாணய சேமிப்புக்களிலிருந்து பெருந்தொகைப்பணம் கடனாகப்பெறப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி 2004 ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணய சேமிப்புக்களிலிருந்து 550 மில்லியன் ரூபாவை அரசு கடனாகப் பெற்றுள்ளது. இந்தத்தொகை 2005 ஆம் ஆண்டில் 965 மில்லியனாக அதிகரித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து பெற்ற சலுகையற்ற கடன்தொகை 55.3சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதிகவட்டி வீதத்தில் டொலர்களில் பெற்ற கடனைத்திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால் மீண்டும் டொலர்களில் சலுகையற்ற கடன் பெறப்பட்டுள்ளது. இந் நடவடிக்கை நாட்டின் பொருளாதாரத்தை சீரழிக்கும் நடவடிக்கையாகும்.

இதேபோன்று எதிர்வரும் மாதங்களிலும் சலுகையற்ற கடன்களைப் பெறமுயற்சித்தால் நாட்டின் பொருளாதார நிலை மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டும். இதன் மூலம் நாட்டு மக்களின் கடன் சுமை அதிகரிக்கும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

J.Y... தொடர் இலக்கம் உடைய ஆட்டோ ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 021 222 6438 (51892)

சேவிஸ் ஸ்ரேஷனுக்குரிய உபகரணங்கள், கொட்டில், செட் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P. 0776904219, 0212225304 (51944)

## வீடு விற்பனைக்கு

இணுவில், மானிப்பாய் வீதியில் 1¼ பரப்புக்காணியில் அமைந்த கல்வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லையா, சிதம்பரேஸ்வரன், பரராசசேகரப்பிள்ளையார் கோயிலடி மேற்கு, இணுவில். (51688)

## வாடகைக்கு

ஈச்சமோட்டை வீதி, முதலாம் ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (பிரபல்ய பாடசாலைக்கு அண்மையில் உள்ளது).தொடர்பு: T.P. 0779037237 (51914)

கோயில் வீதியில் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு. I.N.G.O அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: T.P. 222 3289. இல.15A, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (51948)

**தோல் சிகிச்சை**

காலை 8.30 மணி முதல் 11 மணிவரை தோல் சிகிச்சை நடைபெறுகிறது.

சம்மந்தர்

**மொடேர்ன் வைத்திய நிலையம்**

[அமுல் கிறீம் கவுஸ் அருகே]

இல.08, இராமையா செட்டியார் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (51937)

## இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து வேண்டிய அளவில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49857)

## கடை வாடகைக்கு

முதலாம் குறுக்குத்தெரு, வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள கடை வாடகைக்குண்டு. தொடர்பு: சீ.சிவராசா, இல.4,(158), முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.T.P. 021 222 5782 (51960)

## வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் 113 இலக்க வீடு விற்பனைக்கு/வாடகைக்குண்டு. தொடர்பு: 262, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (51935)

## தவறிவிட்டது

நாவற்குழி, கோவிலாக்கண்டியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் மேரிகிறேஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (648630530 V), விசேட அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் கைதடிச் சந்திக்கும் நாவற்குழி பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேரிகிறேஸ், புனித அந்தோனியார் கோயிலடி, நாவற்குழி, கைதடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (51937)


## வரணி மருந்தகத்தில் நீரிழிவு சிகிச்சை

தென்மராட்சி கிழக்கு,ஜூலை7

வரணி மத்திய மருந்தகத்தில் அண்மையில் நீரிழிவு நோயாளிகளுக்குரிய சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 மணிக்கு இச்சிகிச்சை இடம்பெறும் என மேற்படி வைத்திய நிலையப் பொறுப்பதிகாரி ரீ.கே.நடராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்திய அதிகாரியின் முயற்சியினால் இச்சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வரணி பிரதேசத்தில் இருந்து இந்தச் சிகிச்சைக்காக பலர் பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலைக்கு செல்வது குறிப்பிடத்தக்கது. இச்சிகிச்சை இங்கு ஆரம்பிக்கப்பட்டமை மேற்படி நோயாளர்கள் சிரமம் நீங்கியுள்ளது. (122)

## கொக்குவிலில் நாளை கணனிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை7

கொக்குவில் இந்துக் கல்லூரி இராஜபரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் ஏற்பாட்டில் கணனிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இதில் கலந்து பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (204)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை7

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான பதிவினை உறுதிப்படுத்துதல் குறித்து கலந்துரையாட இருப்பதால், 2001ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியவர்களை உரிய ஆவணங்களுடன் கலந்துகொள்ளுமாறு, யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (204)


## சந்திக்கவும்

**திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் சட்டமாணி கற்கைநெறிக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை நாளை [08.07.2006] சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். திறந்த பல்கலைக்கழக முன்றிலில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தொடர்புகளுக்கு: 0777570248**

**- மாணவர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாஷையூர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் 'கலாபூஷணம்' வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருதுகளைப் பெற்றவரும் அரச அங்கீகாரம் பெற்ற மும்மொழி பெயர்ப்பாளரும் ஈழத்தின் மூத்த இலக்கியவாதியும் சிறந்த எழுத்தாளருமான பாஷையூரைச் சேர்ந்த

**ஜீ.ஜீ.தேவதாசன் (பி.ஏ)**

அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் அவருடைய பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

(51962)(32.17.11.26) **பாஷையூர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.**

## சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்

## தரம் 1 அனுமதி - 2007

**தரம் 1 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 20.07.2006

தலைவர்,

**சத்திய சாயி பாடசாலை,**

சோதி வேம்படி வீதி, மானிப்பாய்.

(51961)
(21.11.17.26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
05 - 07 - 1932



அம்மன் மடியில்
06 - 06 - 2006

திருமதி

## தங்கவடிவேலு அருந்தவநாயகி

எமது அன்புத் தெய்வமே! ஆருயிர் அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்திடைய அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

06.06.2006 அன்று அம்மன் பாதங்களைச் சென்றடைந்த எங்கள் அன்புத் தாயின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், வெளிநாட்டில் இருந்து துயரைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி, ஆறுதல் கூறியவர்களுக்கும் அத்துடன் நேற்று (06.07.2006) வியாழக்கிழமை நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பெரியார் பகுதி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.* (சி/49953)(21.11.17.26)

பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## யுத்தத்திலிருந்து...

(9ஆம் பக்கம் பார்க்க)

களின் பிரதிநிதிகளும், டுபாக்கோ கம்பனிகளின் பிரதிநிதிகளும் நியமிக்கப்படவேண்டுமென ரவிராஜ் எம்.பி.வேண்டுகோள் விடுத்தார்.

இச்சட்டமூலத்தை சமர்ப்பித்த சுகாதார அமைச்சர் நிமல் ஸ்ரீரிபால டி சில்வா, ரவிராஜ் எம்.பியின் கோரிக்கைக்கு உடனடியாக பதிலளித்தார்.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைக்கு மூவினப் பிரதிநிதிகளும் நியமிக்கப்படுவர். இருந்தும் புகையிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் டுபாக்கோ கம்பனிகளின் பிரதிநிதிகளை இச் சபைக்கு நியமிக்கமுடியாது. இது எமது கொள்கைக்கு முரணானது என அமைச்சர் பதிலளித்தார்.

இச் சட்டமூலத்தைச் சமர்ப்பித்து அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா உரையாற்றிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்ட ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றக்குழுத் தலைவர் அத்துரலிய ரத்னதேரர். ஜாதிக ஹெல உறுமய இச்சபையில் 2005ஆம் ஆண்டு முன்வைத்த புகையிலை மற்றும் மதுபாவனை தொடர்பான சட்டமூலத்தை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இச்சட்டமூலத்தில் திருமண விருந்துபசாரங்கள் மற்றும் மரண வீடுகளில் இலவசமாக மதுமற்றும் சிகரட், புகையிலை வழங்கப்படுவதைத் தடைசெய்யும் ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சட்டமூலத்தில் மேற்படி சரத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதி சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஷ் பேசும்போது சட்ட விரோத கசிப்பு, புகையிலை, பீடி, சிகரட் பாவனை காரணமாக தோட்டத் தொழிலாளர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்ததுடன் தோட்டத் தொழிலாளர்களை இவற்றிலிருந்து மீட்பதற்கு ஊடகவியலாளர்கள் உதவவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பகல் போசனத்தின் பின்னர் சபையின் ஆளுந்தரப்பில் அமைச்சர் பேராசிரியர் விஸ்வா வர்ணபால உட்பட மூன்று எம்.பிக்களே காணப்பட்டனர்.

சபையின் இருதரப்பிலும் பல பெண் எம்.பிக்கள் இருந்தபோதும் குறிப்பாக பெண்களைப்பாதிக்கும் மது, சிகரட் பாவனை குறித்து ஐ.தே.க. நுவரெலிய மாவட்ட எம்.பி.ரேணுகா ஹேரத் தவிர்ந்த ஏனைய பெண் எம்.பிக்கள் எவரும்இவ்விவாதத்தில்உரையாற்ற வில்லை.

தோட்டத் தொழிலாளர்களே மது மற்றும் புகையிலை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை மீட்டெடுக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய எம்.பிக்கள் உட்பட ஆளுந்தரப்பு, எதிர்த்தரப்பு எம்.பிக்கள் கோரிக்கை விடுத்தனர்.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை சட்டமூலம் திருத்தங்களுடன் ஏகமனதாகச் சபையில் நிறைவேறியது. (க)


**யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்**

09-07-2006 இல் ஓய்வுபெறும் உபஅதிபர்

**திரு.ஐ.திருவாசகநாதர்** அவர்களின்

## கல்விப் பணியைப் போற்றிப் பாராட்டுகின்றோம்



*கல்விநலம் பேணியுயர் கந்த நல்லூரின்*
*கவின்ஆனைப் பந்திமெதடிஸ் வளர்ச்சி காண*
*நல்விதமாய்ப் பணிசெய்து நலங்கள் பேணி*
*நடைமுறையில் பலபேரின் மதிப்பைப் பெற்று*
*சொல்செயலால் எண்ணத்தால் துணிந்து சேவை*
*தூயமனப் பற்றுடனே சுடரச் செய்தின்று*
*வல்லவராய் ஓய்வுபெறு(ம்) திருவாசக நாதரே*
*வளம்பல பெற்று வாழிய வாழியவே!*

பள்ளிச் சமூகம்

(51939)(26.11.17) **யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.**

# ராம்கோ சீமெந்து
# RAMCO CEMENT

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது
(பிரித்தானிய தரத்திற்கு அமைவானது)

யாழ்.மக்களின் ஏகோபித்த பாவனையில் உள்ள 100 வீதம் OPC யை உள்ளடக்கிய நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த போட்லான்ட் சிமெந்து மொத்த விலை ரூபா 700 ஆகவும் சில்லறை விலை ரூபா 720 ஆகவும் விற்பனை செய்யப்படுகின்றது. ஆகவே 'ராம்கோ' சிமெந்தைப் பாவித்து 80 ரூபாவை மீதப்படுத்துங்கள்.

தொடர்புகளுக்கு:-

**ஈஸ்வர பகவான் அன் கம்பனி,**
**91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P.: 021 2222350**

(சி/49932)
(32.11.17.26)

## மரண அறிவித்தல்

### திருமதி அருட்பிரகாசம் அலங்காரம்



உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருட்பிரகாசம் அலங்காரம் அவர்கள் நேற்று (06-07-2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு பிரகாசம் அவர்களின் அன்பு மகளும் தமியாம்பிள்ளை அருட்பிரகாசத்தின் (முன்னாள் சாரதி, இலங்கை போக்குவரத்துச் சபை) அன்பு மனைவியும் அமரர் பாஸ்கரன், இராசேந்திரம் - பத்மாவதி, றிச்சேட்(ஜேர்மனி) ஆகியோரின் தாயும் செல்வராணி (ஜேர்மன்), செறின் கோமதியின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-07-2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் புனித மிக்கேல் மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு. (50957)(26.11.17)

தகவல்:
**கணவர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - சீனாவுக்கிடையிலான புராதன பட்டுப் பாதை மீண்டும் திறந்து வைப்பு

## ராஜீக உறவுகள் மேம்படுமென நம்பிக்கை

புதுடில்லி,ஜூலை7

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் மூடப்பட்டிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகப் பாதையொன்றை இந்தியாவும் சீனாவும் மீண்டும் திறந்துள்ளன.

இமாசலப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 4,000 மீற்றர் (14,000 அடி) உயரத்திலுள்ள நாதுலா கணவாய் ஒரு காலத்தில் பழம்காலத்து பட்டுப்பாதையின் ஒரு பகுதியாகவிருந்தது. இந்தியாவின் சீக்கிம் மாநிலத்திற்கும் சீனாவின் திபெத் பிரதேசத்துக்கும் இடையிலான ஓர் இடத்தில் இந்தப் பாதை திறக்கும் வைபவம் இடம்பெற்றது. கிழக்கு சீனாவிலிருந்து திபெத்துக்கான ரயில் சேவையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டதையடுத்த சில நாள்களில் இந்தப் பாதைத் திறப்பும் இடம்பெற்றுள்ளது.

கணவாய்ப் பிரதேசம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்திய சீனக்கொடிகள் பறந்துகொண்டிருந்தன. இராணுவ மேள வாத்தியம் முழங்கியது.

இந்தியாவுக்கான சீனத் தூதுவர் மற்றும் சிக்கிம், திபெத் உள்ளூர் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். காலநிலை மோசமாகவிருந்தாலும் வைபவத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான சிக்கிம் - திபெத்திய மக்கள் மத்தியில் உற்சாகத்துக்குக் குறைவிருக்கவில்லையென்று அங்கு சென்றிருந்த செய்தியாளர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பாதைத் திறப்பானது இரு நாடுகளுக்குமிடையிலான ராஜீக மற்றும் வர்த்தகத்துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக செய்தியாளர்கள் கருதுகிறார்கள். உள்ளூர் வர்த்தகர்கள் இந்தப் பாதை திறக்கப்பட்டதை உற்சாகமாக வரவேற்றிருக்கிறார்கள்.

இப்பாதை வழியாக இந்தியா 15 வகையான பொருள்களை தருவிக்கும். வெள்ளாட்டு மற்றும் செம்மறி ஆட்டுத்தோல் யாக் எருதின் வால் மற்றும் பதப்படுத்தாத பட்டு போன்றவை இதில் அடங்கும். அதேபோல் இந்தியாவிலிருந்து சீனா தேயிலை, அரிசி மற்றும் வாசனைப் பொருள்கள் உட்பட 29 பொருள்களை இறக்குமதி செய்யும்.

முன்னர் பௌத்த ராசதானியாகவிருந்த சிக்கிம் 1975ஆம் ஆண்டு இந்தியாவுடன் இணைந்து கொண்டது. ஆனால் அப்பிரதேசம் தனக்குரியது எனக்கூறி சீனா எதிர்த்தது.

நாதுலா கணவாய் வாயிலான பட்டுப் பாதையைத் திறக்க சம்மதித்ததன் மூலம் சீக்கிம் இந்தியாவின் ஒரு பாகம் என்பதை சீனா இப்போது ஏற்றுக்கொண்டுள்ளது. 1962ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற சண்டையைத் தொடரந்து நாதுலா கணவாய்ப் பாதை மூடப்பட்டிருந்தது.

பட்டுப்பாதை என்றழைக்கப்பட்ட இந்த பழம்பெரும் பாதை சீனாவை இந்தியாவுடன் மட்டுமன்றி மேற்காசியா ஐரோப்பாவுடனும் இணைப்பதாய் இருந்தது. (ப)

## 'இன்சாட் - 4சி' செயற்கைக் கோள் திங்கட்கிழமை விண் செல்லும்

பெங்களூர்,ஜூலை7

'இன்சாட்-4சி' செயற்கைக்கோள் எதிர்வரும் திங்கட்கிழமை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்படுகிறது.

இதுகுறித்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: ஸ்ரீஹரிகோட்டாவில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து ஜி.எஸ்.எல்.வி., ரொக்கெட் மூலம் 'இன்சாட்-4சி' செயற்கைக்கோள் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

இன்சாட் செயற்கைக்கோள் வரிசையில் அதிநவீன ரகமான இந்த 'இன்சாட்-4சி' யை வெற்றிகரமாக விண்ணில் செலுத்துவதற்கான ஆயத்தப் பணிகளில் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மைய விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்- இவ்வாறு விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (202)

உலக அரங்கில்

## நடிகர் விஜய்க்கு எதிராக வழக்கு



சென்னை,ஜூலை7

கடந்தாண்டு தீபாவளிக்கு நடிகர் விஜய் நடித்து வெளிவந்த சிவகாசி திரைப்படத்தில் சட்டத்தரணிகளை இழிவுபடுத்தும் வகையில் காட்சிகள் இடம்பெற்றிருந்ததாகக் கூறி, தமிழகம் முழுவதும் சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். 25இற்கும் மேற்பட்ட இடங்களில் நடிகர் விஜய் மற்றும் சிவகாசி பட தயாரிப்பாளர் ரத்தினம், பட இயக்குநர் பேரரசு, வில்லன் நடிகர் பாஸ்கர் ஆகியோர் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

நடிகர் விஜய் உட்பட நான்கு பேர் மீது ராணிப்பேட்டை சட்டத்தரணி பகவத்குமார், ஆற்காடு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கடந்தாண்டு வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விஜய் உட்பட நான்கு பேரும் கடந்த மாதம் நடந்த விசாரணையின்போது ஆற்காடு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதைத் தொடர்ந்து நடிகர் விஜய் உட்பட நான்கு பேருக்கும் பிடியாணை பிறப்பித்து மாஜிஸ்திரேட் குணசேகர் உத்தரவிட்டார். (202)

## இந்திய - தென்கொரிய உறவை வலுப்படுத்த இரு நாடுகளினதும் கப்பல்களின் ஒத்திகை



சாகசக் காட்சி

சென்னை,ஜூலை7

சென்னை துறை முகத்திலிருந்து 36 கிலோமீற்றர் தொலைவில் நடுக்கடலில் இந்திய - தென்கொரிய கடலோரக் காவல் படை வீரர்களின் மெய் சிலிர்க்கும் சாகச நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடந்தது.

இரு நாடுகளுக்கிடையேயான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் இந்த ஒத்திகை நிகழ்ச்சி மிகப் பிரமாண்டமாக அமைந்திருந்தது.

கடல் எல்லைகளில் சர்வதேச தீவிரவாதிகளின் ஊடுருவலைக் கண்காணிக்கும் வகையில் இந்திய - தென்கொரிய நாடுகளுக்கிடையே சமீபத்தில் இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தின்படி இந்திய கடலோர காவல் படை கப்பல் தென்கொரியாவுக்குச் சென்று அங்கு சாகசம் மேற்கொண்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக தென்கொரிய கப்பல் கடந்த திங்கட்கிழமை சென்னைக்கு வந்தது. நேற்றுமுன்தினம் தென்கொரிய கப்பலும் இந்தியக் கடலோரக் காவல்படைக்குச் சொந்தமான கப்பல்களும் கடலில் உள்ள மாசுக்களை அகற்றுதல், துப்பாக்கியால் சுட்டு எதிரிகளை வீழ்த்துதல், தேடுதல் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடுதல், பிரமுகர்களைக் காப்பாற்றுதல் போன்ற சாகசங்களை நடுக்கடலில் செய்துகாட்டின.

(202)

## காஸாவில் கைவிட்ட இடங்களை இஸ்ரேல் கைப்பற்ற ஆரம்பித்துள்ளது

டெல்அவிவ்,ஜூலை7

காஸாவில் முன்பு ஆக்கிரமித்திருந்த பகுதிகளை இஸ்ரேல் மீண்டும் கைப்பற்றத் தொடங்கியிருக்கிறது. இஸ்ரேலிய டாங்கிகளும் கனரக வாகனங்களும் கொண்ட ஒரு படை வடக்கு காஸாவுக்குள் நுழைந்துள்ளது.

தென் இஸ்ரேலிய நகரான அஷ்கெலொன் மீது இரண்டாவது தடவையாகவும் ரொக்கட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதையடுத்து இஸ்ரேல் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஹமாஸ் அரசாங்கத்தின் மீது நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவதென இஸ்ரேல் தீர்மானித்துள்ளது. முன்னதாக ஹமாஸ் போராளி ஒருவரும் பலஸ்தீன பொலிஸ் ஒருவரும் வட காஸாவில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. கடந்த ஜூன் 15ஆம் திகதி இஸ்ரேலியப் படைவீரர் ஒருவர் கடத்தப்பட்டதையடுத்து காஸா மீது இஸ்ரேல் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கிறது. (ப)

## முருகன் - நளினி தம்பதிகளின் உண்ணாவிரதம் 11ஆவது நாளாகத் தொடர்கின்றது

வேலூர்,ஜூலை7

முருகன், நளினி தம்பதியினர் வேலூர் சிறையில் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் இவர்கள் இருவரும், தங்கள் மகள் அரித்திரா தமிழகத்தில் தங்கிப் படிக்க மாணவர் விஸாவை வழங்கக் கோரி கடந்த 25ஆம் திகதிமுதல் உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர்.

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு சிறைத் துறை அதிகாரிகள் அவர்களிடம் பேச்சு நடத்தியபோது அவர்கள் அதற்கு இணங்கவில்லை. இருவரது உடல் நிலையும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (202)

## அமெரிக்கா, ஜப்பான் எதிர்த்தபோதும் வடகொரியா ஏவுகணைப் பரிசோதனை



வடகொரிய ஏவுகணை

வடகொரியா நீண்டதூரம் பாயக்கூடிய ஏவுகணைகளின் சோதனையை பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் நடத்தியது. சோதனையின்போது ஐந்து ஏவுகணைகள் ஜப்பான் கடல்பகுதியில் விழுந்துள்ளன.

வடகொரியா ஏற்கனவே குறைந்த தூரம் பாயும் ஏவுகணைகளை சோதனைக்குட்படுத்தியது. தற்போது அந்நாடு அமெரிக்கா வரை பாயக்கூடிய ஏவுகணைகளைத் தயாரித்து வருகின்றது. அந்த ஏவுகணைகளின் சோதனையை நடத்தவுள்ளதாக வடகொரியா அறிவித்ததையடுத்து அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது நேற்றுமுன்தினம் புதன்கிழமை 6 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியது.

'டேபோடோங் - 2' என்னும் நீண்டதூரம் பாயக்கூடிய ஏவுகணை ஏவப்பட்ட 40 விநாடிகளில் தோல்வியைத் தழுவியது. குறைந்த தூரம் பாயக்கூடிய 5 ஏவுகணைகளும் ஜப்பான் கடல்பகுதியில் விழுந்துள்ளன. இதனால் எந்தவித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா, தனது சுதந்திரதின விழாவைக் கொண்டாட 'டிஸ்கவரி' விண்கலத்தை செலுத்திய அன்றே அதை எட்டக்கூடிய ஏவுகணையைச் செலுத்தி வட கொரியா சோதனையில் ஈடுபட்டது.

வடகொரியாவின் ஏவுகணை சோதனைக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. வடகொரியாவின் இந்தச் சோதனை ஆத்திரமூட்டும் செயல் என அமெரிக்கா கண்டித்துள்ளது.

### கொரிய அதிகாரிகளுக்கு ஜப்பான் வரத் தடை

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதையடுத்து அந்த நாட்டு அதிகாரிகள் ஜப்பான் வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வடகொரிய வர்த்தகக் கப்பல் ஜப்பானுக்கு வருவதற்கும் இதே போன்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை அமைச்சரவைச் செயலர் ஷன்ஸோ தெரிவித்தார்.

இது தொடர்பாக ஷன்ஷோ தெரிவிக்கையில்:

வடகொரியாவின் ஏவுகணை சோதனையையடுத்து அந்த நாடு தொடர்பாக மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த ஏவுகணை சோதனையானது ஜப்பானி[illegible]தல் என்பதால் தடை விதிப்பு அவசியமாகிறது. இந்தத் தடையானது எவ்வளவு நாள் இருக்கும் என்பதை இப்போதே கூற இயலாது.

வடகொரியா ஏவுகணை சோதனை குறித்து சர்வதேச அளவிலான கருத்துக்கேற்ப வடகொரியா மீது பொருளாதாரத் தடை, பணம் அனுப்புவது முடக்கம் போன்ற அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆய்வு செய்யப்படும் - என்றார் ஷன்ஸே (202)

## இங்கிலாந்து நாடாளுமன்றில் சபாநாயகர் பதவி அறிமுகம்

லண்டன்,ஜூலை7

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ஆயிரத்து 400 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக சபாநாயகர் பதவி உருவாக்கப் பட்டுள்ளது.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் பிரபுக்கள் சபை எனப்படும் மேல்சபையில் 'சான்சலர்' என்னும் பதவியே இதுவரை இருந்தது. இப்பதவியில் இருப்பவரே சபாநாயகர் பதவியின் பணியையும் தலைமை நீதிபதி, நீதித்துறை அமைச்சர் ஆகியோரின் பணிகளையும் செய்துவந்தார்.

தற்போது 'சான்சலர்' பதவிக்குப் பதிலாக சபாநாயகர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பதவிக்கு 9 பேர் போட்டியிட்டனர். [illegible]ஸ்ஹெலன் ஹேய்மன் [illegible]ப்பட்டார். இவருக்குச் சம்பளமாகப் பெருந்தொகையும் வழங்கப்படும். அதோடு, ஒரு வீட்டு வசதி மற்றும் தங்க, வெள்ளி அங்கி ஆகியவை வழங்கப்படும். (202)

## நிரம்பி வழியும் சவக்கிடங்கு

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள சவக்கிடங்குக்கு கடந்த மாதம் ஆயிரத்து 595 சடலங்கள் கொண்டு வரப்பட்டன. இதனால் சவக்கிடங்கு நிரம்பிவிட்டது. இது வன்முறை பெருகி உள்ளதையே காட்டுகிறது என்று ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி அல்கெய்டா தலைவன் ஜார்க்காவி கொல்லப்பட்டதை தொடர்ந்து வன்முறை பெருகிவிட்டதாகக் கூறப்படுகிறது. (202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் இயல்பு வாழ்வின் மீது எமக்கு விருப்பம் அதனாலேயே அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

## ஈ.பி.டி.பி. அமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை7

எமது மக்களின் இயல்பு வாழ்வின்மீது விருப்பம் கொண்டு நாம் செயலாற்றி வருகிறோம். அதாவது மக்கள் நலன் கருதிய அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இழந்த உரிமைகளை பெறுவதற்காக எழுந்த மக்கள், இன்று இருக்கின்ற உரிமைகளும் தொலைந்த துயரத்தில் அலைந்து திரியவேண்டிய அவலம் தொடர்கிறது. நாளாந்த கடமைகளை தடையின்றி தொடர்வதற்கான இயல்வு வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்கும் சுதந்திரம் கூட எமது மக்களுக்கு இப்போது இல்லை.

எமது வரலாற்று வாழ்விடங்களுக்கான அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டு தடுக்கப்பட்டு வருகின்றன. கல்வி, வேலை வாய்ப்பு, போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், தொழில்நுட்ப தொழிற்றுறை வளர்ச்சி, தொழிற்பயிற்சி, நிவாரணம், மீள்குடியேற்றம், அச்சமின்றி தொழில் புரிவதற்கான அடிப்படை உரிமை... என்ற தொடரும் எமது மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகள் சீரழிக்கப்பட்டிருக்கின்றன.

எமது மண்ணில் நாம் கால்பதித்த காலம் தொட்டு தொட்ட பணி, தொடர்ந்த பணி, விட்ட பணி, இன்று மறுபடியும் தொடரும் பணியாக எமது மக்களின் இயல்பு வாழ்வின் மீது விருப்பங்கொண்டு நாம் செயலாற்றி வருகின்றோம்.

நாளை வரும் சமாதானம் என்று நாளை வரை காத்திருந்தால் அரசியலுரிமையும் இன்றி இயல்பு வாழ்வும் இன்றி செத்த பிணங்கள்தான் சமாதான தேசத்தில் எஞ்சியிருக்கும். எமது மக்களுக்கான அரசியலுரிமையினை நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் அடையும் வரை சமாதானத்திற்கான எமது பயணத்தில் எமது சேவைகளும் தொடரும்.

ஒரு சுதந்திர தேசத்தில் வாழப்போகும் எமது மக்களுக்கு இப்போதிருந்து நாம் செய்கின்ற சேவைகள் ஊட்டச்சத்திற்கு ஒப்பான மருத்துவமே. மக்கள் படை, பொங்கியெழும் மக்கள் படை, எல்லாளன் படை என்று முகமில்லாமல் முகவரியற்று இல்லாத அமைப்புக்களின் பெயரால் முக்காடு போட்டு போலி முழக்கமிடும் புல்லுருவிகள் யார் என்பது எமது மக்களுக்கு புரிந்த விடயம்.

அநாமதேய அமைப்புக்களின் பெயரால் அச்சுறுத்தல் விடுத்து எமது மக்களுக்கான சேவையை தடுக்க நினைப்பது மக்கள் விரோத நடவடிக்கையே! - என்று அதில் உள்ளது.


Vacancy for staff Assistant (on Contract)
IRQUE-QEF-Medical Faculty Study Program
Faculty of Medicine, University of Jaffna

We are looking for a person with the following attributes to serve as staff assistant.

- Pass in three subjects at the GCE (A/L) Exam
- High level of competency in English
- Competency in MS Office packages
- Age not more than 55 years
- A minimum of two years experience in a similar capacity is preferred. Salary and terms are negotiable.

**The duties Of staff assistant**

+assisting the QEF co-ordinator - Medical study program in administrative tasks and duties within the office.
+ Reception, dispatching and delivery within the University 0f all incoming and outgoing documents, letters, messages e-mails etc, for the office.
+Typing (Microsoft excel and Microsoft Word documents) and appropriate filing of all documents and correspondence.
+Assisting the coordinator QEF-Medical study program in preparing quarterly and annual reports and other clerical work.

Application giving complete bio-data with copies of relevant certificates should be forwarded to the Director/ LTS, IRQUE Project, University of Jaffna on or before 19th July 2006

**Director,**
**IRQUE project,**
**University of Jaffna**
**Jaffna.**

(C/49997)



தீர்ப்பு இல. 1724

05.07.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

26 28 29 48 (01)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201269114 இலிருந்து 201284297

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,69,52,550/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,69,52,550/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 2 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 25 | 5,000/- | 1,25,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 398 | 1,000/- | 3,98,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,253 | 500/- | 6,26,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,116 | 40/- | 7,64,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,057 | 20/- | 3,61,140/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,71,278 | 10/- | 27,12,780/- |
| மொத்தம் | | | 69,88,060/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , சைக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,10,134 | | 75,88,060/- |

தொடர் இல. 301186953 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூலை மாதம் 08 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,76,77,600/-

| | |
|---|---|
| இரத்தினபுரி | 201272904-9-51 |
| கொழும்பு | 201275885-0-77 |
| கம்பஹா | 201271493-6-14 |
| அனுராதபுரம் | 201273767-3-75 |
| களுத்துறை | 201277277-6-72 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


## சமய சந்நிதிகளில்

வடமராட்சி ,ஜூலை7

துன்னாலை வெலிக்கந்த தோட்டம் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-173)

* * *

வடமராட்சி ,ஜூலை7

தென்புலோலி குரும்பைகட்டி ஞான வைரவர் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை இரவு வளுந்துப் பொங்கல் இடம்பெறும். (204-173)

* * *

பளை அரசர்கேணி மொண்டுவான் வைரவர் ஆலய ஆனி விசாகப் பொங் கல் திருக்குளிர்ச்சி இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

காலை 6.30 மணிக்கு பண்டம் எடுப்பு வைபவமும் அதனைத் தொடர்ந்து இரவு விசேட பூஜையும் பொங்கல் உற்சவமும் இடம்பெறும் . (204-117)


## விற்பனைக்கு

வீடியோ கடை மூட இருப்பதனால் தரமான முறையில் பதிவுசெய்யப்பட்ட 800 வீடியோ கசட் மற்றும் 500 (VCD) புதிய - பழைய திரைப்படங்கள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக மட்டுமே கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**நஷனல் வீடியோ சென்ரர்**
*182, கே.கே.எஸ்.வீதி. கொக்குவில்.*
தொ.பே.: *021 222 5908*


## மரண அறிவித்தல்

*இராசதுரை பரமேஸ்வரி*



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை பரமேஸ்வரி அவர்கள் 06.07.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னத்தம்பி இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும் Dr.அருனேந்திரன் (கராப்பிட்டிய வைத்தியசாலை), அருள்தாசன் (லண்டன்), அருள் மதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.மைதிலி (பொரளை தேசிய வைத்தியசாலை), சிவசுகி (லண்டன்), இராமச் சந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திரிஷ்சா (லண்டன்) வின் அன்புப் பேர்த்தியும் தவமணி, காலஞ்சென்ற வர்களான நாகம்மா, காங்கேசு மற்றும் பொற்கொடி (இளைப் பாறிய ஆசிரியை), கணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான இராசையா, கந்தையா (செல்லர்), பூகம்மா மற்றும் ஜெகநாதன், நவரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் வேம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அருளகம்,*
*உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.* (51784)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி

## மாணவிகள் மாகாணமட்ட சம்பியனாகி தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டமைக்கான

# பாராட்டுவிழா - 2006



வடக்கு - கிழக்கு மாகாண சம்பியனாகிய வீராங்கனைகள்



அதிபர், பயிற்றுநர், ஆசிரியர்களுடன் வீராங்கனைகள்

*இடம்:* **கல்லூரி மண்டபம்**
*காலம்:* **இன்று (07.07.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணி**
*தலைவர்:* **திருமதி து.ஜெயவீரசிங்கம்** (அதிபர், மா.ம. கல்லூரி)
*பிரதம விருந்தினர்:* **திரு.பா.விக்கினேஸ்வரன்** (வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள்.

(51973) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் இந்தியா முற்றாக விலகி நிற்க முடியாது!

## தமிழக நாளேடு 'தினமணி' கருத்து

சென்னை, ஜூலை 07

இலங்கைப் பிரச்சினையில் இருந்து இந்தியா முற்றாக விலகி நின்றுவிட முடியாது.

தமிழகத்தில் வெளியாகும் 'தினமணி' நாளேடு இவ்வாறு அதன் ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்திருக்கின்றது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சு தடைப்பட்டு நிற்கும் சூழ்நிலையில் இலங்கையில் அண்மைக் காலமாக வன்முறை வெடித்துள்ளது. அவ்வப்போது நடந்து வரும் மோதல்கள் காரணமாக இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையே முழு அளவிலான போர் ஏற்பட்டு விடுமோ என்ற பதற்ற நிலை உருவாகியுள்ளது.

இதற்கிடையே, தற்போதைய அசாதரண சூழ்நிலை காரணமாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியிலிருந்து தங்களது உயிரைக் காத்துக் கொள்வதற்காக இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்துக்கு வரும் கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இலங்கையில் தற்போதைய வன்முறை மிகுந்த சூழ்நிலைக்கும், அறிவிக்கப்படாத போர்ச் சூழலுக்கும் முழுக் காரணம் இலங்கை அதிபரே என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார். பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனிடம் நேரில் பேசத் தயாராக உள்ளதாக இலங்கை அதிபர் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம் பிரதிநிதிகள், வழக்கறிஞர்கள், அறிவுஜீவிகள் அடங்கிய நிபுணர் குழுவின் மூலம் அமைதிக்கான நகல் செயல் திட்டத்தை உருவாக்க முயற்சிகள் நடந்து வருவதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும், நோர்வே அரசின் முயற்சியில் ஏற்கனவே நடைபெற்று வந்த இரு தரப்புப் பேச்சுகள் மீண்டும் தொடராத நிலையில், இலங்கையில் அமைதி என்பது எட்டும் தூரத்தில் இல்லை என்பதே நிபுணர்களின் கருத்து.

கடந்த மாதத்தில் இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, புதுடில்லி வந்ததன் தொடர்ச்சியாக, இந்திய வெளியுறவுச் செயலர் சியாம் சரண் இலங்கை சென்று அதிபர் ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பது குறித்த பிரதமர் மன்மோகன் சிங்கின் செய்தியைத் தெரிவித்துள்ளார். இந்த இரண்டு நாள் சுற்றுப் பயணத்தின் முடிவில் நிருபர்களிடம் பேசிய சரண், இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் மீண்டும் அரசியல் ரீதியிலான பேச்சுத் தொடங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் ஏற்கனவே நேரடியாகத் தலையிட்டு கையைச் சுட்டுக் கொண்ட இந்திய அரசு, தற்போதைய சூழ்நிலையில் நேரடியாகத் தலையிடாது என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இலங்கைப் பிரச்சினையிலிருந்து முற்றாகவும் இந்தியா விலகி நின்று விட முடியாது. இலங்கையில் மீண்டும் வன்முறைக் கலவரங்கள் தொடர்ந்தால் இந்தியாவுக்கு வரும் அகதிகள் பிரச்சினையைச் சமாளித்தாக வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அங்கு வன்முறைக் கலவரங்களுக்கு முடிவு கட்டி, அமைதி ஏற்படுத்த வேண்டும் என்பதில் இந்தியா வின் தீவிர அக்கறையை வெளியுறவுச் செயலர் வெளிப்படுத்தியுள்ளார்.

அமைதிப் பேச்சை முன்னெடுத்துச் செல்லச் சாத்தியமானவற்றைச் செய்ய இந்தியா தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ள போதிலும், இலங்கை அரசுதான் அது குறித்து முடிவுசெய்ய வேண்டும் என்று எச்சரிக்கை உணர்வுடன் கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இலங்கையில் அமைதிப் பேச்சைத் தொடர வேண்டும் என்பது இரு தரப்பினருக்கும் இடையே சமரசப் பேச்சில் ஈடுபடும் நாடுகளின் வேண்டுகோள் மட்டுமல்ல, இந்தியா போன்ற அண்டை நாடுகளின் கருத்தும் அதுதான்.

எனவே, சமரசப் பேச்சைத் தொடங்குவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதில் இலங்கை அரசுக்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகளுக்கும் பொறுப்பு இருப்பதை மறந்துவிடக்கூடாது.''

- இப்படி அந்த ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் யுனிசெவ் அனுசரணையுடன் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திட்டமிடல், கண்காணித்தல், மதிப்பிடுதல் பிரிவில் வெளிக்கள உத்தியோகத்தர் (யாழ்ப்பாணம், தீவகம்), தரவுப் பதிவாளர் - கணனி (யாழ்ப்பாணம்) ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பொருத்தமான விண்ணப்பதாரிகள் வலயக் கல்விப் பணிமனையில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வ ரத்தினம் தெரிவித்தார்.(204)

## வாக்காளர் டாப்பு மீளாய்வுப் பணி

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடத்திற்கான வாக்காளர் இடாப்புத் திருத்த வேலைகள் இம் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

அதற்கான விண்ணப்ப படிவங்கள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என யாழ் செயலக தேர்தல் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 17ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி வரையான ஒருமாதகாலம் வரை இச்சேவைகள் இடம் பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொருவரும் இப்பதிவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி வேறு மாவட்டங்களில் வசித்தவராயின் அம்மாவட்டத்தில் வசித்ததற்கான சகல ஆவணங்களையும் சமர்ப்பித்து விண்ணப்பிக்க முடியும். (ரி)

# அரச ஹெலியில் வன்னி சென்ற ஐ.ஆர்.ஏ. பிரதிநிதி அங்கு அரசுக்கு எதிராக கருத்துக் கூற முடிந்தது எப்படி?

## அரசாங்கம் விளக்கம் தர வேண்டும் என சபையில் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை

கொழும்பு, ஜூலை 07

''கடந்த இரு வாரங்களுக்கு முன் அரச ஏற்பாட்டில் அரச ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சி சென்று புலிகளைச் சந்தித்து உரையாடிய அயர்லாந்து நாட்டின் ஐ.ஆர்.ஏ இயக்கத்தின் முன்னாள் தலைவர் மார்ட்டின் மக்கினஸ், தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தது தவறு எனக் கூறியுள்ளார். அரசின் ஏற்பாட் டில் புலிகளைச் சந்தித்த இவரே இப்படிச் சொல்லியிருப்பதானது சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசை திருப்பக் கூடியது. இதுபற்றி அரசின் நிலைப்பாடு என்ன?''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையில் கேள்வி எழுப்பினார்.

இந்த நாட்டின் நிலைமையை வந்து அவதானிக்குமாறு அண்மையில் அயர்லாந்து சென்ற அரச பிரதிநிதிகள் அயர்லாந்து அரசிடம் கோரினர். அதற்கு அமைவாக அயர்லாந்தின் ஐ.ஆர்.ஏ இயக்கத்தின் முன்னாள் தலைவர் மார்ட்டின் மக்கினஸ் இலங்கை வந்தார்.

அவர் கிளிநொச்சி சென்று புலிகளைச் சந்தித்து உரையாட அரச ஹெலிக்கொப்டர் உட்பட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து புலிகளைச் சந்தித்து உரையாடிய பின்னர் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தது தவறு எனப் பகிரங்கமாகக் கூறினார்.

அரச ஏற்பாட்டின் கீழ் புலிகளைச் சந்தித்து உரையாடிய அவர் அரசிற்கு எதிரானதொரு கருத்தைத் தெரிவித்துள்ளார். இது பாரதூரமானதொரு கருத்தாகும். இக்கருத்தின் மூலம் சர்வதேச சமூகம் ஐரோப்பிய ஒன்றியத்தைத் தவறாகப் பார்க்கும். தற்போதைய பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை இதுதானா? இந்த நிலையை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

தற்போதைய பிரச்சினையைத் தீர்க்க இதுபோன்று அல்லாமல் நல்லதொரு தீர்மானம் எடுக்கப்படவேண்டும். யுத்தத்தைத் தூர விலக்கி அமைதியை நிலைநாட்ட முயல வேண்டும் -

என்றார்.


**நியூ ஸ்ரீ பாம்பீச் றெஸ்ரோரன்ட்**

இன்று முதல் மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சைவ, அசைவ, சைனீஸ் உணவு வகைகள் மற்றும் ஓடர்களுக்கும் துரித முறையில் சேவை வழங்கப்படும். குளிரூட்டிய தங்குமிட வசதிகளும் உண்டு.

205/1 ராஜா தியேட்டர் கட்டடத் தொகுதி, முதலாம் மாடி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2229553


## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் கந்தசாமி



அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கந்தசாமி 05.07.2006 புதன்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்- இராசம்மா தம்பதியரின் புதல்வனும், சுபத்திரா தேவியின் அன்புக்கணவரும், மகேஸ்வரி, முத்துமாரியின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் அராலி தெற்கு பூனாவடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
ப.இந்திரன் -மருமகன்.
(51990) (இந்திரன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்- யாழ்ப்பாணம்.)

கோப்பாய் வடக்கு

### கலாநிதி சிவஸ்ரீ சோ.சுப்பிரமணியக் குருக்கள்



வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில், மாயத்தலைப் பிள்ளையார் கோயில் பிரதம குருவாகவிருந்த சித்தாந்த பானு சிவாகம விசாரதர் கலாநிதி சிவஸ்ரீ சோ.சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் 05.07.2006 புதன்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.07.2006 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் வடக்கு கந்தன் காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு.

பிரம்மஸ்ரீ பூரண கீதச்சந்திரக்குருக்களும் குடும்பத்தினரும்.
(51983)


**இணைந்த கணிதம்**

A/L 2006 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு
துரித மீட்டல் வகுப்பு
ஆரம்பம்:
08/07- Sat 4 p.m
(Sat,Sun 4 - 5.30pm)
Mr.E.F.R ஜெயக்குமார் BSc
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.


## தவறிவிட்டது

ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் (ஜமகா மேற் 90- சிவப்பு நிறம் - 500-6465) தவறிவிட்டது. தயவு செய்து இது தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

சி.ஸ்ரீதரன்
1039, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி.
தொ.பே 077 6595256
(51986)

சிவமயம்.
ஓர் கணபதியே நமஹ

## குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிரார்த்தனைச் செய்தி

எமது தேவஸ்தானத்தில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மஹோற்சவ கால பேருரைகளையாற்றி எமது கிராமத்தின் சிவாகம சித்தாந்தச் செந்நெறிக்கும், திருமுறைப் பெருநெறிக்கும் தூண்டுகோலாய் விளங்கி வருகின்ற *திருமுறைச் செல்வர் சிவத்திரு ச.விநாயகமூர்த்தி* அவர்களை ஈன்று புறந்தந்து, இன்றமிழை முலைப்பாலோடூட்டி, இன்றியமையாச் சிறப்பினராய் இந்நிலவுலகேத்த வளர்த்தளித்த

*திருமதி செல்லம்மா சபாரட்ணம்* அம்மையார் அவர்கள் ஆயிரம் பிறைகண்டு நிறைவாழ்வு வாழ்ந்து தேகவியோகமடைந்த செய்தியறிந்து, அன்னார் அம்பலவன் தூக்கிய திருவடிக்கீழ் நித்தியானந்தமுற வேண்டுகின்றோம்.

சிவ சிவ.

குப்பிழான்.
(51980)

அவன் பணி வழுவாத
ஆலய பரிபாலன சபை.


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க, உரையாட

**Spoken English with Grammar**

Lectures by: Mr.K.Nishanthan (Dip.In.Eng)

பின்வரும் மூன்று பிரபல நிறுவனங்களில்

* பொருளியற் கல்லூரி-யாழ்நகர்
  பிரிவு I -1.00 p.m, பிரிவு II - 8.00 a.m (சனி, ஞாயிறு)
* பொருளியற் கல்லூரி-இணுவில்
  பிரிவு I -9.00 a.m (சனி, ஞாயிறு)

ஆரம்பம்: 08.07.2006-சனி

* BARATHY - சித்தன் கேணி
  பிரிவு I - 4.00 p.m (திங், செவ்)

ஆரம்பம்: 10.07.2006 - திங்கள்

குறிப்பு: கணனி மூலமான பேச்சுப் பயிற்சிகளும் அச்சடித்த பாடக் குறிப்புகளும் வழங்கப்படும்

**ராஜா** யாழ்ப்பாணம்

கரன், சாதனா நடித்த
கொக்கி (சி-47139)
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
8 முதல் வடிவேல் நடித்த
இம்சை அரசன் 23வது புலிகேசி
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

இன்றுமுதல்
ரிச்சட், மதுமிதா, நாசர் நடித்த
**நாளை**
சண்டைகள் நிறைந்த சித்திரம்
காட்சி நேரம் : 10.30, 2.30
(சி-49108)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதல் நடத்தினர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். உயிரிழந்த அதிகாரி பாதுகாப்பு ஏதுமின்றி ஆயுதங்களையும் தன்னுடன் எடுத்துச்செல்லாமல் அங்கே சென்றார் என்று கடற்படையினர் நீதிவானிடம் தெரிவித்தனர். மீன் வாங்குவதற்காக அவர் அங்கு செல்வது வழமை என்றும் அவர்கள் மேலும் கூறினர்.

கடற்படையின் கீழ் நிலை அதிகாரிகளை மேற்பார்வை செய்வதே ரட்ணாயக்காவின் கடமை. அவரது கொலைக்கு கடற்படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட குறைபாடே காரணம் என நீதிவான் விசனம் தெரிவித்தார்.

அங்கு நடந்த விசாரணையின் பின்னர் பலாலிக்குச் சென்ற நீதிவான் அங்கு சடலத்தைப் பார்வையிட்டதுடன் கொழும்பில் பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

இதற்கிடையே கடற்படை அதிகாரியின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூவரை பொலீஸார் நீதிவான் முன் ஆஜர் செய்தனர். எம்.டி 90 மோட்டார் சைக்கிளில் பயணித்தனர் எனப் பொலீஸார் கூறுகின்றனர். ஹஸன், ஹனிபா,ஜெகன் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

விசாரணைகளில் மோட்டார் சைக்களில் வந்தவர்களுக்கும் ஹஸனுக்கும் தொடர்புகள் இல்லை என்பது தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் விடுதலையானார். ஏனைய இருவரும் மீன் வாங்குவதற்காகவே இங்கு வந்திருந்தனர் என கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவித்தார். இதனை அடுத்து அவர்கள் இருவரையும் பிணையில் விடுவித்தார்.

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சி வட்டாரங்கள் உடனடி யாகக் கருத்து எதனையும் வெளியிடவில்லை.

1994 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது முதல் முறையாக இவர் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருந்தார். (க)

## அனுசரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டதாக அறியவருகின்றது.

"நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு இந்தியா முழு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குகின்றது. நோர்வே தனது அனு சரணைப் பணியைத்தொய்யவிடாது முழு மூச்சில் முன்னெடுத்து ஆக்கபூர்வமான திசையை நோக்கி அமைதி முயற்சிகளை நகர்த்தவேண்டும். இப்போதைய மந்த - தேக்க - நிலையை மாற்றுவதன் மூலம் இலங்கையில் போர் வெடிக்கும் அபாயத்தைத் தவிர்க்க முடியும். அதற்கான எத்தனங்கள் அவசியமானவை" - இந்தச் சாரப்பட நோர்வேயின் அனு சரணைத் தலைமைக்கு புதுடில்லியிலிருந்து தகவல்கள் தெரிவிக்கப்பட்டன என அறியவந்தது.

நோர்வே அனுசரணைப் பணியின் தலைமையில் உள்ள பிரமுகர்கள் தமது ஒவ்வொரு விஜயத்தின் முடிவிலும் அதன் பெறுபேறுகள் குறித்து புதுடில்லிக்கு விஜயம் செய்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிப்பது போல, இம்முறை இந்திய வெளியுறவுச் செயலாளரின் இலங்கை விஜயத்தின் பின்னர், அமைதி முயற்சிகள் தொடர்பாக அந்த விஜயத்தினால் ஏற்பட்ட பெறுபேறுகள், பலன்கள் குறித்து புதுடில்லியிலிருந்து அதிகாரிகள் மட்டத்தில் ஒஸ்லோவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது. (உ)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதே, மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மேலும் கூறியதாவது,

"அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் தான் தீர்வுக்கான வழிகள் குறித்து ஆராய்வதற்கு அரசு குழுவொன்றை நியமித்துள்ளது. அதனை புலிகள் எதிர்ப்பதால் எமக்குப் பிரச்சினை இல்லை. ஏனெனில், புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக நாம் கருதவில்லை.

இவ்வாறான சர்ச்சைகளைக் கிளப்பித்தாமே தமிழர்களின் ஏக பிரதிநிதிகளெனக் காண்பிக்கப் புலிகள் முயல்கின்றனர். அதை ஏற்க முடியாது. தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல தமிழ்க் கட்சிகள் அரசுடன் இருக்கின்றன. அவர்களுடன் ஆலோசித்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை நாம் முன்வைப்போம். புலிகள் எதிர்த்தாலும், எதிர்க்காவிட்டாலும் எமது நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போம்."

- என்று கூறினார் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா. (க)

## சிவராம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதான இருவருக்கும் எதிரான புலன் விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து இருவருக்கும் எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் தீர்மானித்திருக்கின்றார் என அறிய வருகின்றது. (உ)


IIS

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !!

உங்களுக்காக விசேட பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன

New Batches Start on :
Batch 3 : 10.07. 2006
Batch 4 : 23.07. 2006
at 09.30 A.M.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES
# 100, Clock Tower Road, Jaffna
TP. No : 021 222 2831

SPOKEN ENGLISH WITH GRAMMAR
ஆரம்பமாகிவிட்டது.
சனி, ஞாயிறு 10 am
By: A.BRITTO
யூனிவேசல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

நியூட்டன் அக்கடமி
புதிய பிரிவு
3மாத காலத்தில் பேச, எழுத, வாசிக்க
சிங்களம்
By: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம் : 8.7.2006
Sat 4.30 p.m
(Sat, Sun) 4.30 p.m

BRIGHTMAN
பிரிவு 2
சரளமாக உரையாட
சிங்களம்
By: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம் : 8.7.2006
Sat 3 p.m
(Sat, Sun) 3 p.m

S.L.A.S S.L.E.A.S
பரீட்சைகளுக்கான கருத்தரங்கு
ஆரம்பம் : 08.07.2006 சனி ஒரு மணி
பொதுஉளச்சார்பு : த.தவசேகர்
கிரகித்தல் : பா.மகாலிங்கசிவம்
சனி, ஞாயிறு, திங்கள் (10/7) 1 - 4மணி வரை
*ஒவ்வொரு வகுப்புக்கும் கட்டணம் 150/=
*இப்பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல் திங்கள் முதல் கிடைக்கும்
D.M.I ஆரியகுளம் சந்திக்கு கிழக்கே, யாழ்நகர்.

NEW SCIENCE COLLEGE
நிலை மின்னியல்
By: கருணாநிதி
Mon, Wed 2.30 - 3.30
ஆரம்பம் : 10.07.2006
குறிப்பு: ஆசிரியரின் வகுப்புகள் யாவும் 08.07.2006 இலிருந்து வழமைபோல நடைபெறும்.

வெளியாகியது
அரசாங்க முகாமை உதவியாளர் சேவை தரம் IIIற்கு போட்டி பரீட்சை வழிகாட்டி (எதிர்பார்க்கக் கூடியது)
இலங்கை முன்னணி ஆசான்
P.கமல்தாசன்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம் புத்தகசாலைகள்

IBMS
புதிய பிரிவு ஆரம்பம்
பிரிவு IV : 10.07.2006
பகல் 10.00 மணி
Head Office : # 209, Manipay Road, Vaitheeswara Junction, Jaffna.
T.P. No. : 021 222 8232
Branches : * NMMV Road, Nelliady
* Sangaththanai, - Chavakachcheri

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள்
பிரிவு III ஆரம்பம் 09.07.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க,
A/L மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
DIPLOMA IN PROFESSIONAL MS OFFICE 2003 4 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING 4 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING 4 Months
DIPLOMA IN WEB DESIGNING 4 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE 6 Months
DIPLOMA IN INTERNET E-MAIL 2 Months
Softview Computer College
Head Office :- 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
Branch :- 55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

சதுரங்கப் போட்டி
CHESS 4 ஆம் பக்கம் பார்க்க

SPECIAL ENGLISH CLASS
GRAMMAR & SPOKEN
100 மணித்தியாலங்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க கற்கலாம். தினசரி வகுப்புகள், அச்சடித்த பாடங்கள், A/L பரீட்சைக்கு தோற்றியவர்கள், உள்நாட்டில், வெளிநாட்டில் உயர்கல்வி பெற, தொழில் வாய்ப்பு பெற உகந்த கல்வி.
Lectures By : Mr.A.RAJAGOPALAN - Mr.B.RUBAN
ஆரம்பம் : 09 -10. July .2006
JAFFNA TECHNICAL INSTITUTE
No: 07, Palaly Road, Jaffna.

விமானப் பயணச் சீற்
★ முன்கூட்டிய பதிவுகளுக்கு சலுகைக் கட்டணம்
★ யாழ்.கொழும்பு துரித தபால் மற்றும் ஆவண சேவை

MANOJ AIR TOURS (PVT) LTD.
இல.32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3916, 0777 517019, 0777 801038


## தேவை
### NIGHT SUPERVISOR

கொழும்பிலுள்ள சுடர் ஒளி பத்திரிகை நிறுவனத்தில் மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு தகுந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. G.C.E O/L பரீட்சையில் விண்ணப்பதாரர் சித்தியடைந்தவராகவும், 35-50 வயதிற்கிடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். Administration, Production துறைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்குமிட வசதி வழங்கப்படும்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10.07.2006க்கு முன்னர் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்
உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


DIPLOMA& AD.DIPLOMA
Programmes of the CITY & GUILDS (UK)
@ APSS International
Approved Center by C&G
Specially designed by our Senior lecturer - CHANDIRABOSE
Just 5 months will get Your Diploma
Electrical & Electronic Engineering
Telecommunication System Engineering
Construction industry including Quantity Serveying.
Introducing 1st Time in Sri Lanka Mechatronics Engineering
Hardware Engineering
Diploma in Computer Studies
Enrol Before 15th July
Day / Evening / Week End Classes (Time Table Designed)
Engineering Council Graduate Diploma Classes & Projects Will Be Commencing on 1st Aug 2006
APSS International
No.5, Harmers Avenue, Colombo.06
Tel : 2361587/0773236380/2362571
www.apssinternational.com

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.